பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 23 செவ்வாய்க்கிழமை (08.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 264

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

புதிய அரசியலமைப்புக்கே மக்கள் ஆணை வழங்கினர்

## அரச சார்பற்ற நிறுவனத்தினரே 20ஆவது திருத்தத்தை எதிர்ப்பவர்கள்

### அமைச்சர் விமல் வீரவன்ஸ சாடல்



(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றவே கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு மூன்றில் இரண்டு பெரும் ▷23

மோ.சைக்கிள் விபத்தில்

## படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பப் பெண் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த பிரதீபன் சதீனா (வயது - 38) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே உயிரிழந்த ▷23

## தங்கம் மீதான வரியை நீக்க ஜனாதிபதி தீர்மானம்

(கொழும்பு)

இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணக் கைத்தொழிலாளர்கள் ஈட்டும் இலாபத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த 14 சதவீத வருமான வரி மற்றும் 15 சதவீத தங்க இறக்குமதி வரிகளை நீக்குவதற்கு ஜனாதிபதி ▷23

## எண்ணெய்க் கப்பலில் மீண்டும் தீ பரவல்

(கொழும்பு)

சங்கமன்கண்டி கடற்பரப்பில் வீசும் கடும் காற்றினாலும் கப்பலில் காணப்படும் கடும் வெப்பம் காரணமாகவும் நியூ டயமண்ட் கப்பலில் மீண்டும் தீ பரவ ஆரம்பித்துள்ளதாக இலங்கை கடற்படை அறிவித்துள் ▷23

குறுகிய காலத்துக்குள் நிறைவேற்றுவதற்கு

# அதிகாரங்களை வழங்குவதே 20ஆவது திருத்தத்தின் நோக்கம்

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

**குறுகிய காலத்துக்குள் நமக்குத் தேவையானவற்றை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிகாரங்களை வழங்குவதே 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் நோக்கமாகும் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கடந்த மூன்று தினங்களாக பாராளுமன்ற பேரவை மிகப் பெரியளவில் விமர்சனத்திற்கு உள்ளானது.

அது ஆணைக்குழுக்களுடன் சம்பந்தப்பட்டது. 20ஆவது திருத்தச் சட்டத்தால் ஆணைக்குழுக்கள் ஒழிக்கப்படும் என சிலர் கூறுகின்றனர்.

இது முற்றிலும் ▷23

## இறந்தவரின் உடலில் அசைவு இருப்பதாகத் தெரிவித்ததையடுத்து

### பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று மாலை பரபரப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இறந்ததாக தெரிவித்து தற்காலிக பிண அறையில் வைக்கப்பட்டிருந்தவரின் உடலில் அசைவு இருப்பதாக உறவினர்கள் தெரிவித்ததையடுத்து வைத்தியசாலையில் நேற்று மாலை பரபரப்பான சூழல் காணப்பட்டது. ▷23

## சுகாதார அமைச்சர் பவித்திரா இந்திய உயர்ஸ்தானிகருடன் பேச்சு



▷23

## தூக்குத் தண்டனை குற்றவாளியும் பாராளுமன்றம் வருகின்றார்

9ஆம் பக்கம் பார்க்க

சஜித் அணியின் பாராளுமன்றக் குழு

## 20ஆவது திருத்தத்தை எதிர்க்க ஏகமனதாக தீர்மானம்

(கொழும்பு)

20ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுடன் அதனை தோல்வியடையச் செய்ய நடவடிக்கைகளை எடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழு ஏகமனதாக தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

பாராளுமன்ற கட்டடத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் ▷23

தனிமைப்படுத்தலில்

## இருந்தவர் உயிரிழப்பு

நுவரெலியாவில் பரபரப்பு

9ஆம் பக்கம் பார்க்க

குற்றங்கள் குறையாவிட்டால்

## ஆணைக்குழுக்கள் இருந்தும் என்ன பயன்?

### அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

குற்றங்கள் குறையாவிட்டால், ஆணைக்குழுக்கள் இருநது என்ன பயன்? மக்களின் பாதுகாப்பைத்தான் நாம் முதலில் பார்க்க வேண்டும் என அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அலி சப்ரி ▷23

# பதினோராம் ஆண்டு நினைவலைகள்...

**திரு. திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின்**
**தெய்வத் திருமகன் தெய்வ மணங் கமிழ் செல்வன்**


## “ சந்துதன் ”

**( 08.09.2020 )**



திருவளர் அமிர்த ஞானதேவனே கணேசமூர்த்தியுள் மிகுபாற்
தருணாங் தெய்வ மணங்கமிழ் சந்துதன் அவர்களின் நினை
திருவருள் புரிதிரு வீரமாகாளி வடபத்திர காளி திவ்விய பாதம் பணிந்தேன்
குருவாயென் சிந்தையிருக்குமன்னை அருள் நங்கை ஈன்ற
கருவளர் தெய்வத் திருமகன் தன்னைக் காத்தருள்வாயே
நெரு நல்லுலகில் வந்த அன்புக்கருமுதல் பிள்ளை
வருகின்ற உலகில் எங்குற்றிருக்கின்றானோ கார்
கைலாச நாதனே என்பூஜை ஏற்றருள் நற்கோவே போற்றி...

(C-262)



உன்னினைவில் வாழும் உன் மாமா :- அன்பு நெகிழ் சோமையா

**சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்**
(ஆதீன கர்த்தா, நெல்லண்டை பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்)


**சிவஸ்ரீ. சோமாஸ்கந்த. தனஞ்செயன் குருக்கள்**
(கரவெட்டி, தல்லையப்புலம் வீரபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்)

**சிவஸ்ரீ. இராமலிங்க. சுந்தரலிங்கம் குருக்கள்**
(நெல்லண்டை பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்)

**சிவஸ்ரீ. திருஞானசுந்தர - திருஞானசம்பந்தக் குருக்கள்**
(முல்லை., குமுழமுனை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம் )

**சிவஸ்ரீ. சண்முகரெட்ண குருக்கள் பிரசன்னன் குருக்கள்**
(திருக்கோணேச்சரம் சிவன் தேவஸ்தானம், திருகோணமலை - பிரதமகுரு )

# மரண அறிவித்தல்



## பிரம்மஸ்ரீ ஞானபண்டிதக் குருக்கள் சபாரட்ணசர்மா

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ ஞானபண்டிதக் குருக்கள் சபாரட்ணசர்மா நேற்று (07.09.2020) திங்கட்கிழமை சிதம்பரேஸ்வரர் கழலடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானபண்டிதக் குருக்கள் - இரத்தினம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுருவில் நடராஜக் குருக்கள் - யோகாம்பாள் தம்பதியரின் மருமகனும் வடிவாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும் புவனேஸ்வரி (கீரிமலை) அவர்களின் அன்புச் சகோதரனும் சுந்தரமூர்த்திசர்மா (கீரிமலை) அவர்களின் அன்பு மைத்துனரும் வைதேகி (மலேசியா), வாசுதேவக் குருக்கள் (குருபீடாதிபதி - வீணாகான குருபீடம்), மாதினி (இலண்டன், முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலி. தென்மேற்கு பிரதேச சபை), உமாபதிசர்மா (அபிவிருத்தி உத்தியோகத்தர், MOH Office பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்தானகோபாலக் குருக்கள் (மலேசியா), சாருலதா, முரளீதரசர்மா (இலண்டன்), வாசுகி (முகாமைத்துவ உத்தியோகத்தர் - ஆதார .வைத்தியசாலை - பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரவிசங்கர்சர்மா, உதயசங்கர்சர்மா, ஜீவசங்கர்சர்மா ஆகியோரின் அன்புத் தாய் மாமனும் சைலேந்திரசர்மா, சஸ்வினி, சைந்தவி, சிவாத்மிகா, சிவானுகா, சிவானுஜன்சர்மா, ஸ்ரீநயா, ஸ்ரீநிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2020) செவ்வாய்க் கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிவன் கோவிலடி,
சித்தன்கேணி.

தகவல்:
**குடும்பத்தினர்**

# 11 ஆம் ஆண்டு கண்ணீருடன் பிரிவுத்துயர் பகிர்வுகள்

# சண்முகநாதன் சந்துதன்


(08.09.2020)

| எம் அகத்தில் எம்மோடு | இறை அகத்தில் இறைவனோடு |
|---|---|
| 07.02.2000 | 08.09.2009 |



அன்பே சந்துதா எங்கே நீ.

அருமை மகனே! அன்புத் தெய்வமே அழகு மகனே அறிவான புத்திரனே சந்துதா! 11 ஆண்டுகள் உமைப்பிரிந்து இவ்வுலகில் நரக வாழ்க்கை வாழும் நாம் நீ வருவாயா என ஏங்கி வாழ்ந்து கொண்டிருக்கும் மாயமான வாழ்க்கை இது எம் தவிப்பும் சத்தமும் உமக்கு கேட்டாலும் நீ எம்மோடு பேசாமல் மௌனமாக இருப்பது ஏன் மகனே உம் அன்னையும் தந்தையும் மட்டுமல்ல உம் சகோதரருக்கும் இப்போ நீ வரமாட்டாய் என்று உணரும் பருவம் வந்ததனால் அண்ணாக்கும் இனி வரமாட்டார் என எண்ணி அழுது துடிக்கும் காட்சியை சகிக்க முடியவில்லை. பிறநாடு சென்ற அண்ணா வருவார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்த சகோதரர்கள் நீர் பிற உலகம் சென்றதை ஜீரணிக்க முடியாமல் கேள்வி மேல் கேள்வி கேட்டு எங்கள் நெஞ்சங்களை துளைப்பது உன் காதில் கேட்கின்றதா மகனே!



மரணமும் ஜனனமும் நியதி தான் என்ற அருமையான தத்துவத்தை உணர வைத்த அன்பு மகனே! மரணித்த பின்னும் நீ வருவாய் என உன் நிழல் படத்தை வைத்து பொய் கனவு காணும் எங்களைப் பார்த்து நீ கலங்க வில்லையா ராசா.

11 ஆண்டு அல்ல பல்லாயிரமாண்டானாலும் உனை நாம் மறக்கத் தான் முடியுமா? உயிருடன் நாம் வாழும் எத்தனை ஆண்டானாலும் உம்முடன் நாம் வாழ்ந்த காலத்தின் இன்பத்திற்கு ஈடாகாது என் அருமை செல்வமே!

நீ என்றாவது வருவாய் என்ற அர்த்தமற்ற நம்பிக்கையோடு உம்மை எம் நெஞ்சில் வாழ வைத்து கொண்டிருக்கும் எம் உறவுகளுக்கு நீ தரும் பதில் தான் என்ன மகனே.

காலங்கள் கடக்க கவலைகளும் மறையும் என்ற உண்மையை நீ பொய்யாக்கி விட்டாய். காலங்கள் கடக்க எமக்கு கவலையும் பெருகுகின்றது. ராசா நாம் யாரை தான் நோவது?

எம் விதியைத்தான் நோக வேண்டும். உம்மோடு வாழ முடியாத துர்ப்பாக்கிய சாலிகள் ஆகி விட்டோம். ஆனால் உம் நினைவை யாராலும் எப்பவும் பிரிக்க முடியாது என்ற நம்பிக்கையில் இன்று வரை உமை எண்ணி வாழ்ந்து வரும்.



(C-254)

**உமது அருமை பெற்றோர்**
**சண்முகநாதன் அருள்நங்கை**
**அன்பு சகோதரர் தேவசந்துதன், தேவசாத்வீகன்**
**உற்றவர்கள்.**

**லக்ஸ்மி,**
**சங்கரப்பிள்ளை வீதி,**
**ஆனைக்கோட்டை.**

# சமூகக் கட்டமைப்பை உடைத்தெறியும் நுண்கடன்கள்

# கொள்கை வகுத்து செயற்படத் தயார்

## யாழில் மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மக்கள் அதிகளவிலான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள் சம காலத்திலே வட்டி உயர்வு, பெற்றுக் கொண்ட நுண்கடனை கட்ட முடியாது போதல் போன்ற பல காரணங்களால் குடும்பப் பெண்கள் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.**



நுண்நிதிக் கடன் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலொன்று மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் லக்ஷ்மன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது. நுண்நிதிக்கடன் தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகளை அறிந்து அவற்றுக்கு, மத்தியவங்கி, அரசாங்கத்துடன் இணைந்து பல்வேறு தரப்பட்ட கொள்கைகளை வகுத்து எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் கட்டியெழுப்பும் நோக்குடனே குறித்த கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கலந்துரையாடலின் போது சுமார் 25 பயனாளிகள் நுண்கடன் தொடர்பில் தமது தனிப்பட்ட ரீதியான பிரச்சினைகளையும் அப்பிரச்சினைகளுக்காக அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வுத் திட்டங்களையும் ஆளுநர் முன்னிலையில் தெரிவித்தனர்.

பயனாளிகள் கூறிய கருத்துக்களை பதிவு செய்த பின்னர் மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் லக்ஷ்மன் தெரிவிக்கையில், நுண்நிதிக்கடன் தொடர்பில் நீங்கள் அனைவரும் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என விளங்கிக் கொள்கிறேன். கடந்த காலங்களிலே அதாவது உள்நாட்டுப் போருக்கு முன்னதான காலப்பகுதியில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கவில்லை. எனினும் சில நிறுவனங்கள் கடந்த காலங்களிலும் சிறப்பாக செயற்பட்டுள்ளன. அவற்றை மீளவும் கட்டியெழுப்பி இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து பொதுமக்கள் விடுக்கக் கூடிய கொள்கைகளை வகுப்பதற்கு நான் தயாராகவுள்ளேன், என தெரிவித்தார். நுண்நிதிக் கடன் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள், புகார்கள் இருப்பின் 021 228 5915, 009411247 7966 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடாக தொடர்பினை ஏற்படுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்தகலந்துரையாடலில் மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் லக்ஷமன், பிரதி ஆளுநர், உதவி ஆளுநர்கள், யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய அங்கஜன் இராமநாதன் மற்றும் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ம.பிரதீபன் ஆகியோர்கலந்து கொண்டனர். (5-8)

# அரசியல் என்ற எல்லை கடந்து

# அரசியல் சாசனத்துக்காய் ஒன்றிணைவோம்

## ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மூன்று அணிகளாகப் பிரிந்து நிற்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைவது காலத்தின் தேவை எனத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனிற்கு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கட்சியினால் யாழ்.நகரில் கடந்த சனிக்கிழமை வரவேற்பு நிகழ்வு நடத்தப்பட்டது. அந்நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் புதிய அரசாங்கம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி பீடத்தில் அமர்த்தப்பட்டிருக்கின்றது.

பௌத்த சிங்கள வாக்குகளே தங்களை ஆட்சியில் அமர்த்தியதாக அரசாங்கத் தலைவர்கள் கூறி வரும் இவ் வேளையில்,


சுதந்திர இலங்கைத்தீவின் வரலாற்றில, கடந்த காலத்தில் சில சந்தர்ப்பங்களில், பாரிய ஆதரவுடன் அரசாங்கங்கள் பதவிக்கு வந்திருக்கின்றன.

1956 ஆம் ஆண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாவிட்டாலும், பண்டாரநாயக்க தலைமையில் போதுமான அறுதிப் பெரும்பான்மையோடும், இருபத்து நான்கு மணிநேரத்தில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி ஆக்கப்படும் என்ற இனவெறிக் கோஷத்தோடு ஒரு அரசாங்கம் சிங்கள மக்களால் ஆட்சியில் அமர்த்தப்பட்டது.

அடுத்த இரண்டாண்டு காலத்தில், இதுவரை இலங்கையின் வரலாறு காணாத இனவெறித் தாக்குதல்களை தமிழ் மக்கள் சந்தித்தார்கள்.

யுத்தம் முடிவுக்கு வந்து பதினொரு வருடங்கள் பறந்தோடி விட்ட நிலையிலும் இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்கு இன்னமும் தீர்வில்லை.

இந்த நிலையில் தான் மகிந்த ராஜபக்ஷவின் புதிய அரசாங்கம் பதவி ஏற்றிருக்கின்றது.



புதிய அரசியல் சாசனம் வரையப்படவுள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க காலகட்டத்தில், எமது நீண்ட கால அரசியல் நிலைப்பாடுகளை வலியுறுத்தும் அதே நேரத்தில், யதார்த்தங்களை மனதில் நிறுத்தி ஆக்கபூர்வமான ஓர் அணுகுமுறையை வகுத்து, அரசியல் மற்றும் இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக எமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்க, சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் நாம் எடுத்தாக வேண்டும்.

இதன் முதற்கட்டமாகவும் முதற்படியாகவும் மூன்று அணிகளாகப் பிரிந்து நிற்கும் தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளை ஒரு பொது நிலைப்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு நாம் விரைவாகவும் வேகமாகவும் முயற்சிக்க வேண்டும்.

பொறுமையோடும் விவேகத்தோடும் முயன்றால் அது சாத்தியமாகும் என்றே நாம் நம்புகிறோம். அடுத்ததாக, இந்தப் பொது நிலைப்பாட்டுக்கு, பாராளுமன்றத்தில் எதிர்த் தரப்பிலும் ஆளுங்கட்சி வரிசைகளிலும் அமர்ந்திருக்கும் தமிழ் உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

இது ஒன்றும் சுலபமானது அல்ல. குறிப்பாக, ஆளுங்கட்சி வரிசைகளில் அமர்ந்திருக்கும் தமிழ் உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதில், யதார்த்த ரீதியாக, பல்வேறு கஷ்டங்களும் நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன. அவர்களில் பலர் வெவ்வேறு பதவிப் பொறுப்புகளில் அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதை நாம் ஒரு போதும் மறந்து விட முடியாது. அதற்காக நாம் மனம் தளரவேண்டியதுமில்லை.

எது எப்படி இருந்தாலும் புதிய அரசியல் சாசன விவகாரம் தொடர்பில் எம் இனத்தின் நீதியான கோரிக்கைகளை முன்வைத்து நாம் செயற்பட்டேயாக வேண்டும். இது கட்டாயமானது. தவிர்க்கப்படமுடியாதது.

புதிய அரசியல் சாசனத்தில் நீதி கிடைக்கவில்லையெனில், எமது பிரச்சினையை அடுத்த களத்திற்கு நகர்த்த வேண்டியிருக்கும். அது நிச்சயமாக சர்வதேச அரங்கமே!

எமது பிரச்சினையில், சர்வதேச அரங்கில் பல நாடுகளின் ஆதரவு அல்லது அனுதாபம் எம் தரப்புக்கு தொடர்ந்து கிடைத்தவண்ணமே உள்ளன.

ஒரு கதவு அடைக்கப்படும் போது இன்னொரு கதவு திறந்து கொள்கிறது என்கிற பொன்மொழியினை நாம் நினைவில் கொள்வது நல்லது என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# இராசிபலன்

08.09.2020
ஆவணி 23, செவ்வாய்க்கிழமை
சஷ்டி முன்னிரவு 9.37 மணிவரை
பரணி காலை 7.30 மணிவரை
சுபநேரம் 10.34 - 12.04 மணிவரை
இராகுகாலம் 3.04 - 4.34 மணிவரை
சந்திராஷ்டமம் - சுவாதி
கார்த்திகை விரதம், கபில சஷ்டி

வளவன்

**மேஷம்**
காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**ரிஷபம்**
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்**
எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கடகம்**
பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பு உயரும் நாள்.

**சிம்மம்**
சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி**
மறைமுக எதிர்ப்புகள் மாறும், பூர்வீக சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புண்டு.

**துலாம்**
சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**விருச்சிகம்**
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன நன்மையுண்டு.

**தனுசு**
அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும் நாள், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி கைகூடும்.

**மகரம்**
பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்**
வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மீனம்**
பகை விலகி பாசம் கூடும் நாள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த திருப்பங்களைக் காணலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், சகோதர வழி ஒற்றுமை மேலோங்கும்.

**சாதாரணமாக உன்னை மீறி உன் மனதிற்குள் ஒன்றும் நடப்பதில்லை**


# 10 ஆம் ஆண்டு நினைவு ஜெப ஆராதனை

## திருமதி சிசிலியா குணமணி இராசரத்தினம்

(ஓய்வு நிலை பிரதி அதிபர்)

அன்னார் பருத்தித்துறை மெதடிஸ்த (M.G.H.S) பெண்கள் உயர்தரப் பாடசாலையில் பிரதி அதிபராக பணியாற்றியவர். யாழ்.ஹாட்லிக் கல்லூரியில் கணித ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற J.S.இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் ஆவார்.



மண்ணில் 18.06.1929 விண்ணில் 08.09.2010

அன்பான தாயே ஜெபத்தோடு வளர்த்தீரே! கருணை உள்ளம் கொண்டவரே!
பிறம்பின்றி கற்பித்தீரே என்றும் உள்ளத்தில் வீற்றிருப்பீரே!
பத்து ஆண்டுகள் கடந்தும் உம் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது
இறைவனடி வாழ்ந்து எம்மை நினைவு கூருவீர். உங்கள் ஆத்மா சாந்தியடைய
எம் பெருமான் இயேசு பிரானை பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் பெயரால் பெதனி கடற்கரை வீதி, பருத்தித்துறையில் உள்ள எங்களது வீட்டில் 08.09.2020 இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும் ஜெபக் கூட்டத்தில் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

(C-258)

"பெதனி" 1ஆம் குறுக்குத்தெரு,
கடற்கரை வீதி, பருத்தித்துறை.

இங்ஙனம்
கணவர், பிள்ளைகள்.



# மரண அறிவித்தல்

## திரு.ஹரிகிருஷ்ணா தனபாலசிங்கம் (கஜன்)

(Civil Engineering)



மண்ணில் 08 . 11 . 1990

விண்ணில் 03 . 09 . 2020

கிளிநொச்சி பளை கச்சார்வெளியைப் பிறப்பிடமாகவும் கனடா WHITCHURCH STOUFFVILLE ஐ வதிவிடமாகவும் கொண்ட ஹரிகிருஷ்ணா தனபாலசிங்கம் அவர்கள் 03.09.2020 வியாழக்கிழமை அன்று கனடாவில் அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா-செல்வராணி தம்பதியர், வீரகத்தி-பூரணம் தம்பதியரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் மங்கையற்கரசி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், ஜெயரூபன், சந்திரா தம்பதியரின் அருமை மருமகனும், சபீதா அவர்களின் ஆருயிர் கணவரும், மலர்விழி (மாலதி-பிரான்ஸ்), ஜெயமாலினி (மாலினி-பிரான்ஸ்), ஜெயதீபன் (தீபன்-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிறீஷ்கந்தராஜா (சிறி-பிரான்ஸ்), விஜயரூபன் (விஜயன்-பிரான்ஸ்), சதாலட்சுமி (சதா-கனடா), வினோத் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜீதன், ரேணுஜன், ஜிலக்ஷி, சரண், சகீரன், சாரகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாய் மாமனாரும், தட்ஷா, தக்ஷயா (கனடா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு Chapel Ridge funeral Home & Cremation Centre, 8911 Wood bine Ave, Markham ONL3R5G1, Canada வைக்கப்பட்டு பின்னர் 09.09.2020 நாளை 8.30Am - 11.30Am மணியளவில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மங்கை - 0014377779098 (கனடா),
தீபன் - 0014169036998 (கனடா),
விஜயன் - 0033615145567 (பிரான்ஸ்),
சிறி - 0033651822745 (பிரான்ஸ்)

தகவல்:-
நல்லையா ஜெயவீரசிங்கம்
(தங்கன்-சாவகச்சேரி)
சித்தப்பா (077 693 3255)

(C-3817)

# கிருசாந்தியின் 24 ஆம் ஆண்டு நினைவு தினம்






தமிழ்த் தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட மாணவி கிருசாந்தி குமாரசாமி மற்றும் அவரது தாய், சகோதரன், அயலவர் ஆகியோரது 24 ஆவது ஆண்டு நினைவதினம் நேற்று செம்மணியில் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ் சுயாட்சிக் கழகத் தலைவி அனந்தி சசிதரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- சுமித்தி)

## கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துத் தம்பி மகாவித்தியாலயத்தில் 2019 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டிலும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெறத் தவறிய மாணவர்களை 13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச் சித் திட்டத்தின் ஊடாக தொழிற்றுறை பிரிவில் இணைக்கும் கல்வி முறைக்கான அனுமதிகள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. எனவே மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் ஆர்.பசுபதீஸ்வரன் அறிவித்துள்ளார். (5-4)

# "விதையனைத்தும் விருட்சமே" அமைப்பின் சமூகப்பணி




(குப்பிழான்)

"விதையனைத்தும் விருட்சமே" இளைஞரணியின் ஏற்பாட்டில் "பிளாஸ்டிக் அற்ற யாழை நோக்கிய பயணம்" எனும் தொனிப் பொருளிலான இரண்டாவது கட்ட சமூகப் பணி கடந்த சனிக்கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வளாகம் மற்றும் தெல்லிப்பழை நகர வீதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

இதில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தாதியர்கள் உள்ளிட்ட ஊழியர்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், வலி.வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், சபை ஊழியர்கள், தெல்லிப்பழை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் காங்கேசன்துறை, பலாலி, அச்சுவேலி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், காங்கேசன்துறை 515 ஆவது பிரிகேடியர் படை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் உள்ளிட்ட சுமார் நூறிற்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இதன்போது அகற்றப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகள் உரிய வகையில் தரம் பிரிக்கப்பட்டு மீள் சுழற்சிக்காக வலி.வடக்குப் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-4-18)

# தமிழினத்திற்கு எதிராக சிங்களதேசம் மிக ஒற்றுமையாகச் செயற்படுகிறது

## ஆனால் நாம் என்ன செய்கிறோம்? செல்வம் அடைக்கலநாதன் கேள்வி



(குப்பிழான்)

சிங்களதேசம் இனவாதத்தைச் சொல்லி ஒற்றுமையாக கொக்கரிக்கிறது. ஆனால், தமிழர் தேசத்தில் ஒற்றுமை என்பது கானல் நீராகவிருக்கிறது. இதற்கு விலை கொடுக்கின்ற நிலைப்பாடும் காணப்படுகிறது.

இதனை எதிர்க்கின்ற சக்திகளாக குரல் கொடுக்கின்றவர்களாகச் சொற்பமானவர்களே காணப்படுகிறார்கள். தமிழ்த் தேசம் எங்கே போகிறது? என தமிழ் ஈழ இயக்கத்தின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கடும் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள் இந்த மண்ணில் பூர்வீகக் குடிகள் என்று சொல்ல முடியாது என மிக மோசமான இனவாதக் கருத்துக்களைப் பௌத்த பிக்குகள், பிரதமர் உட்பட எதிர்க்கட்சி வரிசையைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சிங்கள தேசத்தவர்கள் ஒற்றுமையாக நின்று தமிழர்களைப் பார்த்துக் கொக்கரிக்கின்றதொரு நிலைப்பாடு இலங்கையில் தொடர்ந்து கொண்டிருப்பதை நாம் கேட்டுக்கொண்டும் பார்த்துக்கொண்டுமிருக்கின்றோம்.

முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழ்மொழி முதல் தோன்றிய மொழி எனப் பாராளுமன்றத்தில் தெரிவித்தமைக்கு எதிர்ப்பலைகள் எழுந்துள்ளன.

எங்கள் மண்ணில் நாம் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டுமென்ற இலட்சிய நோக்கத்திற்காகத் துப்பாக்கி ஏந்திய பல ஆயிரக் கணக்கான இளைஞர், யுவதிகள் மாண்டார்கள். எமது இனம் விடுதலைக்காக கொடுத்த விலை அதிகம்.

தமிழர்களுக்காகப் பேசினால் சுட்டுக் கொல்லப்படுவீர்கள் என முன்னாள் நீதியரசரைப் பாராளுமன்றத்தில் எச்சரித்த பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா இராணுவப் பதவியிலிருந்து என்ன சுட்டார்? என்பது தெரியவில்லை என அவர் தெரிவித்தார். (5-4-18)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

சங்கானை காளி கோவிலடியைச் சேர்ந்த ஆர்.ஜீவன் (992681012V) என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும். (5)

## தொழில்நுட்பவியல் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான (Courses-HNDA, HNDM, HNDE, HND in CE, HND in EE, HNDQS & HNDTHM) 2020 ஆம் கல்வி ஆண்டுக்குரிய புதிய அனுமதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி 06.10.2020 ஆகும்.

இம்முறை விண்ணப்பங்கள் அனைத்தும் இணைய வழி (online) மூலமாகவே மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு - www.sliate.ac.lk என்ற இணையத்தளத்தை பார்வையிடவும். இதற்கு மேலதிகமாக 021 222 9803, 021 222 2595 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பை மேற்கொள்வதன் மூலம் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.உயர் தொழில் நுட்பவியல் நிறுவன உதவிப்பதிவாளர் யோ.ரிஷாந்தன் அறிவித்துள்ளார். (5)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர் வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே சகல பெற்றோர்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு பதில் அதிபர் திருமதி எஸ்.சுனேத்ரா அறிவித்துள்ளார். (5)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு 19 ஆவது திருத்தம் காரணமாகாது

## பாதுகாப்புத்துறை முறையாக செயற்படவில்லை என்கிறார் முஜிபுர்

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் ஒருபோதும் காரணமாகாது என்றும் பாதுகாப்புத்துறை முறையாக செயற்படாவிட்டால் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சாடினார்.**

19 ஆவது திருத்தத்தின் காரணமாகவே ஐக்கிய தேசியக்கட்சி பிளவடைந்ததாகவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 19ஆவது அரசியலமைப்பு திருத்தம் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடவில்லை. அது அரசியல் ரீதியான காரணங்களாலே பிளவு பட்டுள்ளது. அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றமைக்கும் 19 ஆவது திருத்தம் காரணமாகாது.

அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவினுடைய கவனயீனமே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு காரணமாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சென்று சாட்சியமளிக்கும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளினுடைய சாட்சிகளின் அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவே பொறுப்புக்கூற வேண்டியவர் என்பது தெளிவாகிறது. 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரும் நாட்டில் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.



அத்துடன் கடந்த அரசாங்கத்தில் தேசிய பாதுகாப்பு சபை கூடும் போது அவற்றுக்கு அப்போதைய பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவில் பிரதிப்பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா சாட்சியமளிக்கும் போது சஹ்ரானை கைது செய்வதற்காக புதுக்கடை நீதிமன்றத்தில் பிடியாணை பெற்றுக் கொண்டு அதற்கான நடவடிக்கை எடுத்தாகக் கூறினார்.

இதன் போது அவர் முன்னாள் ஜனாதிபதியையும் பாதுகாப்பு செயலாளரையும் கொலை செய்வதற்கு முயற்சித்தாகக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கமைய சுமார் 8 மாதங்கள் சிறையிலடைக்கப்பட்டார். எனவே குண்டுத் தாக்குதல்களுக்கு 19 ஆவது திருத்தம்காரணமாகாது என அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# தனித்து நின்ற வாகனம் பொலிஸ் நிலையத்தில்



(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் காலை தனிமையில் நின்ற டாட்டா ரக வாகனத்தினை பொலிஸார் மீட்டு சென்றனர்.


பாலமோட்டை - ஈச்சங்குளம் பிரதான வீதியின் காட்டுப்பகுதியில் பல மணி நேரமாக வாகனம் ஒன்று தனிமையில் நிற்பதாக கிடைத்த தகவலையடுத்து ஓமந்தை பொலிஸார் கட்டுப்பாட்டுப்பகுதியில் நின்ற குறித்த வாகனத்தை மீட்டதுடன் அப்பகுதியில சோதனை நடவடிக்கையையும் மேற்கொண்டிருந்தனர்.

மரம் கடத்தலுக்கு குறித்த வாகனத்தினை பயன்படுத்தியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன் வாகனத்தின் உரிமையாளரை அறிவதற்குரிய நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாகவும் ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.(5-4-250)

# “பாதாளயோ” “கோட்டாபய” இருநூல்கள் வெளியீடு

(கொழும்பு)

பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குண ரட்னவால் எழுதப்பட்ட பாதாளயோ (பாதாள உலகத்தினர்) என்ற நாவலும் கோட்டாபய என்ற நூலின் ஆங்கிலப் பிரதியும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப் பட்டது.



உண்மையான பல நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு பாதாளயோ என்ற நாவல் எழுதப்பட்டுள்ளது. கோட்டாபய என்ற சிங்கள நூல் கடந்த வருடம் வெளியிடப்பட்டிருந்த நிலையில் ஆங்கில பிரதி வெளியிட்டு வைக்கப்பட்டது. இரு நூல்களினதும் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் குலரத்ன மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்த்தன, மகிந்தானந்த அளுத்கமகே, சரத் வீரசேகர, நாலக கொடகேவா ஆகியோரும் அமைச்சுக்களின் செயலாளர்கள், முன்னாள் இராணுவத் தளபதிகள், தற்போதைய தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்புத்துறை முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 10 - செவ் 6 ல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. சொந்த வாகன சாரதி<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11166 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 38 செவ் 8 ல் உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்: B.Sc, M.Sc, PGDM. Senior programme officer.<br>எதிர்பார்ப்பு: படித்த அரச தனியார் உத்தியோகமுள்ள மணமகன்.<br>தொ.இ: G/9027 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 21 செவ் 4 ல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. சொந்தக்கடை.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/1167 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 29 - செவ் 2 ல் உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்: IT Software Engineer. Engineer (Colombo)<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர், வைத்தியர். (உள்நாடு)<br>தொ.இ:G/9046 |
| பிறப்பு: 1984 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: செவ் 3 ல்உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. வாகன உதிரிப்பாக விற்பனை நிலைய 2ம் நிலைப்பதவி. கனரக வாகன சாரதி<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11168 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: செவ் 11 ல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி.<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் வங்கி உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/9059 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: சூரி, செவ் 1 ல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. வியாபார பிரதிநிதி.<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/11170 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 32 செவ் 12 ல்உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. தனியார் தற்காலிக வேலை.<br>எதிர்பார்ப்பு:. அரச, தனியார் உத்தியோகம். விவாகரத்தானவரும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/9063 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கமக்கார அமைப்பின் கோரிக்கைக்கமைய செம்மணிகுளம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

இருபாலைதெற்கு கமக்கார அமைப்பின் காலபோக பயிர்ச் செய்கை தொடர்பான கலந்து ரையாடல் கடந்த சனிக்கிழமை பொதுநோக்கு மண்டபத்தில் கமக்கார அமைப்பின் தலைவர் த.தர் சன் தலைமையில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் உரும்பிராய் கமநலசேவைகள் திணைக் கள அபிவிருத்தி உத்தியோ த்தர் திருமதி.மைதிலி ஜெய சுதன் திணைக்கள உத்தி யோகத்தர்களும் கலந்து கொண்டு கருத்துரைகள் வழ ங்கினர்.

செம்மணிக்குள புனரமை ப்பு,கட்டாக்காலி கால்நடை களின் நடமாட்டத்தை கட்டுப்ப டுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

விளைவிக்கப்படாத விளை நிலங்களை பண்படுத்தி விளை நிலமாக்குதல், பிர தேசத்தில் உள்ள ஏனைய குளங்களையும் புனரமைத் தல், வாய்க்கால்களை சீராக் குதல்,சிறுதானிய பயிர்ச் செய் கைகளை செய்வதற்கான ஊக் குவிப்புக்களை வழங்குதல், விவசாய வீதிகளை புனரமை த்தல் போன்ற பல்வேறு விட யங்கள் இவ்வருட செயற் பாட்டில் இணைக்கப் பட்டுள்ள தாகவும் செயலாளர் கஜேந்திர குமார் தெரிவித்தார்.

மேலும் தமது கமக்கார அமைப்பின் கோரிக்கைக்கு அமைவாக செம்மணிக்குளம் தூர்வாரி புனரமைக்கப்படவுள் ளதாகவும் தெரிவித்தார். (5-4)

# சொகுசு பேருந்து விபத்து 10 இற்கு மேற்பட்டோர் காயம்

(குருமன்காடு)



வவுனியாவிருந்து கொழு ம்பு நோக்கி பயணித்த சொகுசு பேருந்து சாலியவெவ பகுதி யில் விபத்துக்குள்ளானதில் 10இற்கு மேற்பட்ட பயணிகள் காயங்களுக்குள்ளாகியுள் ளனர்.

வவுனியா பகுதியில் அமை ந்துள்ள தனியார் நிறுவனத் திற்கு சொந்தமான பயணிகள் சொகுசு பேருந்து வவுனியா புதிய பேருந்து நிலை யத்தி லிருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் மதியம் பய ணித்தது.

அநுராதபுரம் - புத்தளம் பாதையூடாக கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது மாலை 4.30 மணி யளவில் சாலியவெவ பாட சாலைக்கு அருகே பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டையி ழந்து விபத்துக்குள்ளானது. பயணிகள் அனை வரும் வண் டியின் அவசர பாதையூடாக பேருந்திலிருந்து வெளியேறி னர்.


இவ்விபத்தில் 10க்கு மேற் பட்ட பயணிகள் காயங்களுக்கு ள்ளாகினர்.

மழை காரணமாகவே இவ் விபத்து இடம் பெற்றதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

விபத்து தொடர் பான மேலதிக விசாரணை களை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-250)

# வெள்ளை நிற நாவல்பழம்

(கிளிநொச்சி)



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் உழ வனூர் கிராமத்தில் தனியார் ஒருவரின் காணியில் அரிய வகை வெள்ளை இன நாவல் இனம் காணப்படுகிறது.

உழவனூர் கிராமத்தில் வசிக்கும் வல்லிபுரம் இரா ஜேந்திரம் என்பவரின் காணி யில் குறித்த வெள்ளை இன நாவல் மரம் இனம் காண ப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை தனது காணியில் உள்ள தோட் டக்கிணற்றை துப்பரவு செய்யும் பணியின் போது குறித்த நாவல் மரத்தின் பழங்கள் வித்தியாசமாக இருப்பதனை அவதானித்த அவர் அதனை பிடுங்கி உண்ட போது அவை நன்கு பழுத்த நாவல் பழங் களாக காணப்பட்டன.

நாவல் மரம் அதன் தோற் றம் என்பன வழமையான நாவல் மரம் போன்றே காண ப்படுகின்ற. காய்களும் வழமை யான நாவல் காய்கள் போன்றே உள்ளன. ஆனால் பழங்கள் மாத்திரம் வெள்ளை நிறமாக அதாவது .நெல்லிக்காய் நிறத் தில் காணப்படுகின்றன.

பழத்தின் சுவை வழமை யான பழத்திலிருந்து வேறு படுகிறது என அதன் உரி மையாளர்தெரிவித்தார். (5-4-350)

# மாஞ்சோலை வைத்தியசாலை தொடர்பாக ஆளுநரை சந்தித்த அபிவிருத்திக் குழு

(முல்லைத்தீவு)



முல்லைத்தீவு மாஞ் சோலை வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பாக வைத்தியசாலை அபி விருத்தி குழு வன்னி மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் செல் வம் அடைக்கலநாதனுடன் வட மாகாண ஆளுநரை நேற்று சந்தித்து கலந்துரையாடி னர்.

இதன்போது வைத்திய சாலையில் காணப்படும் வைத் தியர் பற்றாக்குறை மற்றும் பல்வேறு குறைபாடுகள் தொட ர்பில் ஆளுநருக்கு சுட்டிக் காட் டப்பட்டது.

பிரச்சனைக்கு உரிய தீர்வை பெற்று தருவதாக ஆளுநர் தெரிவித் தார். (5-4-299-350)

# குடும்ப விபரங்கள் சேகரிப்பு பூரண ஒத்துழைப்பு வழங்கவும்

## வவு.பிரதேச செயலர் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலக பிரிவிலுள்ள குடும்பங்கள் தொடர்பான தகவல்களை திர ட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளமையினால் அதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு வவுனியா பிர தேச செயலாளர் ந. கமலதாசன் வேண்டுகோள்விடுத்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டு ள்ளதாவது;

புதிதாக நியமனம் வழங் கப்பட்ட பட்டதாரிப்பயிலுநர்கள் மக்களின் வீடுகளுக்கு வருகை தரும் சமயத்தில் அவர்களது அடையாளத்தினை உறுதிப் படுத்திக்கொண்டு அவர்களி னால் கேட்கப்படும் விபரங் களை பூரணமாக வழங்கி ஒத் துழைப்பு வழங்குவதுடன்

குடும்ப விபர அட்டை அல் லது அதற்கு பதிலாக வழங் கப்பட்ட ஆவணம், 2019 வாக் காளர் இடாப்பு சிட்டை, குடும்ப அங்கத்தவர்களின் விபரங்கள் , பிறப்பு சான்றிதழ்கள், தேசிய அடையாளஅட்டை, திருமண ச்சான்றிதழ், தொலைபேசி இலக்கம், கொடுப்பனவு விபரம் ,காணி ஆவணங்கள் என்ப வற்றை பொதுமக்கள் தயார் நிலையில் வைத்திருக்குமாறு அவர் மேலும் தெரிவித் தார். (5-4-250)

# வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர் ஹெரோயினுடன் சிக்கினார்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத் திய சாலைக்குள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஹெரோயின் போதைப் பொருளுடன் வந்த நபர் ஒரு வரை வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்ப டைத்துள்ளனர்.

இது தொட ர்பாக மேலும் தெரியவருவதா வது,வைத்திய சாலையின் ஆண்கள் விடுதி யில் சிகிச்சை பெற்று வந்த இளைஞன் ஒருவர் இரவு வைத்தியசாலையின் மதில் ஏறிப் பாய்ந்து வெளியே சென்று பின்னர் தீப்பெட்டிக் குள் போதைப் பொருளை மறைத்து எடுத்து வந்துள் ளார்.

இதனை அவதானித்த பாது காப்பு உத்தியோகத்தர்கள் அவரைப் பிடித்து பொலிஸாரி டம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த நபர் திருட்டு சம்பவம் ஒன்றில் ஈடுபட்ட சமயத்தில் காயமுற்று பொலி ஸாரால் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப் பித்திருந்த போதே அவர் இக் குற்றச் செயலில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)



பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பான சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வு கிளிநொச்சியில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில்.விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆர்.பானுஜா தலைமையில் இடம்பெற்றது. இதில் சட்ட ஆலோசகராக சட்டத்தரணி சர்மிளா கலந்து கொண்டார்.

# உலகின் மோசமான பயங்கரவாதிகளுக்கு

# புனர்வாழ்வளித்த நாடாக இலங்கை அங்கீகாரம்

## மகிந்த பெருமிதம்



(கொழும்பு)

**மனித உரிமைகளை பாதுகாத்து, உலகின் மிக மோசமான பயங்கரவாதிகளுக்கு புனர் வாழ்வளித்த நாடாக இலங்கை அங்கீகரிக் கப்பட்டுள்ளது என மகிந்த ராஜபக்ஷ பெரு மிதம் அடைந்துள்ளார்.**

நேற்று முன்தினம் அமரர் சந்திரசிறி கஜதீரவின் நினைவுதின விழாவில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "யுத்தம் நிறைவடையும் காலத்தின்போது சந்திரசிறி கஜதீர, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சராக சேவையாற்றினார்.

இந்நாட்டின் சுமார் 13 ஆயிரம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் புனர்வாழ்வு பெறுவதற்காக அவரிடம் சரணடைந்தனர்.

அவரது ஆட்சிக் காலத்தில், 13 ஆயிரம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு எவ்வித பிரச்சினைகளும் இன்றி விடுவிக்கப்பட்டனர்.

மேலும், பயங்கரவாதிகளுக்கு புனர்வாழ்வளித்த நாடு என்ற வகையில் இலங்கைக்கு உலக மத்தியில் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளது.

அவை அனைத்திற்கும் அமரர் சந்திரசிறி கஜதீரவின் அரசியல் அறிவு மற்றும் நற்பண்பு என்பனவே காரணமாக அமைந்தது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## ராஜிதவிற்கு நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு


(கொழும்பு)

நீதிமன்றில் முன்னிலையாகுமாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன விற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மற்றும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோரை ஒக்டோபர் 29 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஜ-44)

## பிரேமலால் ஜயசேகர சபை அமர்வில் கலந்து கொள்ளலாம்

### நீதிமன்று உத்தரவு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவை பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதற்கு அனுமதிக்குமாறு சிறைச்சாலை திணைக்களத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவு நேற்று திங்கட்கிழமை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதவான் ஏ.எச்.எம்.டி.நவாஸ் மற்றும் நீதிபதி சோபிதா ராஜகருணா ஆகியோர் பிறப்பித்தனர். (ஜ-2)

## மரம் முறிந்து விழுந்ததில் மின்சாரம் துண்டிப்பு



(ஹற்றன்)

கடும் காற்றுடன் கூடிய அடைமழையால் ஹற்றன்- டிக்கோயா மெனிக்வத்த 2 ஆம் பிரிவில் பாரிய மரமொன்று மின் இணைப்புகள் மீது முறிந்து வீழ்ந்ததால் அப்பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் 105 குடும்பங்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

## 196 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, வெவ்வேறு நாடுகளில் இருந்து மேலும் 196பேர் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்துள்ளதாக கொவிட்-19ஐ கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

ஜேர்மனியில் இருந்து 11 பேரும், டுபாயில் இருந்து 20 பேரும், டோகாவில் இருந்து 75பேரும், சென்னையில் இருந்து 2பேரும், ஜப்பானில் இருந்து 2 பேரும் நோர்வேயில் இருந்து 86பேரும் இவ்வாறு வருகை தந்துள்ளனர்.

இவ்வாறு வருகைதந்த அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, நாட்டிலுள்ள தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என தேசிய செயற்பாட்டு மையம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ-4)

## தனிமைப்படுத்தலிலிருந்தவர் உயிரிழப்பு

(நுவரெலியா)

சுற்றுலா விடுதியொன்றில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நபரொருவர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, காலில் ஏற்பட்டிருந்த காயம் மற்றும் மாரடைப்பு காரணமாக இவர் கடந்த 2ஆம் திகதி நுவரெலியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## நாட்டில் இதுவரை 2 இலட்சத்து 40 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள்


(கொழும்பு)

கொரோனா தொற்றாளர்களை அடையாளம் காண நாட்டில் இதுவரை 2 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன்படி தற்போது மொத்தமாக 2 இலட்சத்து 41 ஆயிரத்து 631 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. நேற்று முன்தினம் மாத்திரம் ஆயிரத்து 724 பி.சி.ஆர் சோதனைகள் நடத்தப்பட்டதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

12

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



• பிரதேச சபைத் தலைவர் தற்காலிக வரவு- செலவு திட்டத்தினை சபைக்கு முன்வைத்தல் (பி.ச. சட்டம் 168 (3))

• பிரதேச சபைத் தலைவர் நிறைவேற்றப்படாத அல்லது ஏற்றுக் கொள்ளப்படாத வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகளை எடுத்தல். (பி.ச.சட்டம் 169)

• பிரதேச சபைத் தலைவர் தேவைக்கேற்ப வரவு- செலவுத்திட்டத்தில் திருத்தங்களை செய்தல். (பி.ச.சட்டம் 170)

• பிரதேச சபைத் தலைவர் சட்ட ரீதியற்ற செலுத்துகை தொடர்பாக தலைவர் மற்றும் பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஏதாவது குறிப்பிட்ட விடயத்திற்காக செலுத்தினார்கள் அல்லது செலுத்துவதற்கு அதிகாரத்தினை வழங்கிய நபர்களாக செயற்படல். (கணக்கின் கணக்காய்வும் மேலதிக கட்டணமும்) (பி.ச. சட்டம் 172)

• பிரதேச சபைத் தலைவர் சபையின் வேலை நிறைவேற்றப்படுவதற்கான ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல். (பி.ச. சட்டம் 173)

• பிரதேச சபைத் தலைவர் ஏதாவது ஒரு விடயத்தின் சட்ட நிலவரத்தினை அறிந்து கொள்வதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி ஆணையாளரிடம் கேட்டல். (பி.ச சட்டம் 175 (1))

• பிரதேச சபைத் தலைவர் சபைக்காக கடன் ஒன்றினை பெற முயற்சிக்கும் போது சபை அனுமதி அளிக்காவிடின் உள்ளூராட்சி ஆணையாளரினுடைய அனுமதியினை பெற்றுக் கொள்ளல். (பி.ச சட்டம் 178/181)

• பிரதேச சபைத் தலைவர் திறனற்றமை, முறைதவறியஆட்சி, குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிராகரித்தல் அல்லது கணக்கெடுக்காமல் இருத்தல், தவறிய நடத்தை, அமைச்சர் அல்லது உள்ளூராட்சி சபை ஆணையாளரினுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமை, கவனயீனம், அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்தல் போன்ற காரணங்களுக்காக உறுப்பினர்களை பதவியில் இருந்து விலக்குதல். (பி.ச. சட்டம் 185 (1))

• பிரதேச சபைத் தலைவர், சபைக்கு சொந்தமான வளங்களை பிரயோசனமாகவும் திறன்மிக்கதாகவும் பயன்படுத்தியதாக மாகாணசபைக்கும் கணக்காய்வாளர்களுக்கும் பொறுப்புக்கூறல் வேண்டும்

### உள்ளூராட்சி மன்றத்தின் நிதி முகாமைத்துவம் தொடர்பான பொறுப்புகள் மற்றும் பணிகள்

உள்ளூராட்சி மன்றத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரைப் போன்றே கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற ரீதியில் நகர முதல்வர் அல்லது தலைவர், கீழ்க் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் சான்றுப்படுத்த வேண்டியுள்ளது.

• உள்ளூராட்சி மன்றத்தின் நிதிகளின் பாதுகாப்புத் தன்மை மற்றும் அந்நிதியை செலவு செய்தல் தொடர்பிலும், சபை உத்தியோகத்தர்களால் தமது நிதி ரீதியான பணிகள் உரியவாறு நிறைவேற்றப்படுகின்றன என்பது தொடர்பிலும் சான்றுப்படுத்தல்.

• உள்ளூராட்சி மன்றம் மற்றும் அதன் உப அலுவலகங்கள்-திணைக்களங்களில் போதுமானவாறு நிதிக் கட்டுப்பாடு காணப்படுகிறதா என்பதை தெரிந்து வைத்திருத்தல்.

• உள்ளூராட்சி மன்றத்தின் நிதி நடவடிக்கைகள் உரியவாறு திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் அனைத்து நிதிக் கொடுக்கல்-வாங்கல்களும் நிதி மற்றும் நிர்வாக விதிகள்-நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளைச் சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் இடம்பெறுகின்றனவா என விழிப்புடனிருத்தல்.

• வருமானங்களைச் சேர்த்தல் மற்றும் செலவுகள் தொடர்பில் போதுமானவாறு உள்ளகப் பரிசோதனை விதிமுறைகளைத் திட்டமிடல்.

• நிதி மற்றும் களஞ்சியக் கொடுக்கல்-வாங்கல்கள் தொடர்பில் போதுமானவாறு உள்ளக கணக்காய்வு முறையொன்றைப் பேணிச் செல்லுதல்.

• சபையின் நிதி மற்றும் அசையாச் சொத்துக்களின் பாதுகாப்பை சான்றுப்படுத்தும் வகையில் தேவையான விதிமுறைகளைத் திட்டமிடல்.

• ஏதேனுமொரு நிதிரீதியான அல்லது வேறு வகையான கடப்பாடு காரணமாக தமது நேர்மை தொடர்பில் பிரச்சினையொன்று தோன்றும் வகையிலான நிலைமைக்கு ஆளாகாமல் இருத்தல் வேண்டும்.

• சபையின் பொது முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு அலுவல்கள் தொடர்பான மாதாந்தம் நகர ஆணையாளர்-செயலாளர் தலைமையிலான பிரிவுத் தலைவர்கள் மற்றும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களைத் தொடர்புபடுத்திக்கொண்டு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

• உள்ளூராட்சி மன்றத்தின் ஒட்டுமொத்த செயற்றிறனை வளர்த்துக் கொள்வதற்காக நிறுவனத்தின், ஒவ்வொரு பிரிவையும் சமமாக அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் நகர முதல்வர்-தலைவரின் முதன்மைப் பொறுப்பாகும்.

> **உள்ளூராட்சி மன்றத்தின் நிதி முகாமைத்துவம்**
>
> **நிதி நடவடிக்கைகளை உரியவாறு திட்டமிடல், நிதிகளின் பாதுகாப்புத் தன்மை, போதுமானவாறு நிதிக் கட்டுப்பாடு, வருமானங்களைச் சேர்த்தல், நிதி மற்றும் களஞ்சியக் கொடுக்கல்-வாங்கல்கள் தொடர்பில் போதுமானவாறு உள்ளக கணக்காய்வு, அசையாச் சொத்துக்களின் பாதுகாப்பு போன்றவை உள்ளூராட்சி மன்றத் தலைவரின் பொறுப்பாகும்**

### உள்ளூராட்சி சபைகளின் கணக்காய்வு

பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குக் குழுவும் மாகாண சபையின் கணக்குக் குழுவும் உள்ளூராட்சி சபைகளின் கணக்கறிக்கைகள் மீதான பரிசீலனைகளை மேற்கொள்ளும். கணக்காய்வாளர் நாயகமே அவ்வறிக்கைகளைச் சமர்ப்பிப்பார். எனவே உள்ளூராட்சி சபைகளின் கணக்குகளைக் கணக்காய்வுசெய்வது கணக்காய்வாளர் நாயகத்தின் பொறுப்பாகும். (அரசியல் அமைப்பு உறுப்புரை-154(1))

### உள்ளூராட்சி நிறுவனத்தின் சமூகப் பொறுப்புகள்

உள்ளூராட்சி நிறுவனத்தின் நகர முதல்வர்-தலைவர் தமது அதிகாரப் பிரதேசத்தின் பிரதான பிரஜையாவார். அதற்கேற்ப, பிரதேசத்தின் மக்கள் மத மற்றும் கலாசார விழாக்களில் பிரதம விருந்தினராக செயலாற்ற வேண்டியேற்படும். அவ்வாறே தமது உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் பல்வேறு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் நட்புரீதியான தொடர்புடன் செயலாற்றுவதும் உள்ளூராட்சி மன்ற நிறைவேற்றுப் பிரதானிகளின் பொறுப்பாகும்.

### முதல்வர்-தலைவர் நிர்வாகச் சட்டம் பற்றித் தெரிந்து கொள்ளுதல் மற்றும் அது பற்றி புரிதலுடன் செயலாற்றும் பொறுப்பு

உள்ளூராட்சி மன்றத்தின் பிரதானி மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற ரீதியில் நகர முதல்வர்-தலைவர் மக்களுக்காக சபையின் கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கும் போதும் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்தும் போதும் இலங்கையில் அமுலிலுள்ள ஆட்சிச் சட்டம் பற்றிய மொத்த புரிதலுடன் செயற்பட வேண்டும். (நன்றி:- மேற்கூறப்பட்ட பல தகவல்கள் ஆசியா நிலையத்தால் வெளியிடப்பட்ட "உள்ளூராட்சி மன்றப் பிரதானிகளின் பணிப்பொறுப்புகள் பற்றிய வழிகாட்டற் கோவை" இலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

> **தமது உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் பல்வேறு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் நட்புரீதியான தொடர்புடன் செயலாற்றுவதும் உள்ளூராட்சி மன்ற நிறைவேற்றுப் பிரதானிகளின் (முதல்வர்/ தலைவர்) பொறுப்பாகும்.**
>
> **முதல்வர்-தலைவருக்கு நிர்வாகச் சட்டம் பற்றித் தெரிந்து கொள்ளுதல் மற்றும் அதுபற்றி புரிதலுடன் செயலாற்றும் பொறுப்பும் உள்ளது.**

### 2016 ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் முதல்வர்-தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகள் மற்றும் பணிகள்.

தகவலுக்கான சட்டத்தின் 23(1) (ஆ) உப வாசகத்திற்கேற்ப, உள்ளூராட்சி மன்றமொன்றின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் தகவல் உத்தியோகத்தராகக் கருதப்படுவார். அதற்கேற்ப, நகர முதல்வர்-தலைவரிடம் மேற்குறிப்பிட்ட சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப சட்டரீதியான பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே ஏதேனுமொரு பிரஜை அல்லது நிறுவனத்தால் தகவலுக்கான உரிமைச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் கீழ் உள்ளூராட்சி மன்றத்திடமிருந்து கோரப்படுகின்ற ஏதேனுமொரு தகவலை வழங்குதல் மற்றும் அதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குதல் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையில் நகர முதல்வர்-தலைவரின் கடமை ரீதியானதும் சட்ட ரீதியானதுமான பொறுப்பாகும்.

> **தகவலுக்கான உரிமைச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் கீழ் உள்ளூராட்சி மன்றத்திடமிருந்து கோரப்படுகின்ற ஏதேனுமொரு தகவலை வழங்குதல் மற்றும் அதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குதல் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையில் நகர முதல்வர்-தலைவரின் கடமை ரீதியானதும் சட்ட ரீதியானதுமான பொறுப்பாகும்.**

### உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பொறுப்புக்கள்

1. உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய கடமைகள், அதிகாரங்கள், வளங்கள் மற்றும் கூட்டமைப்பு தொடர்பாக பூரண விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளல்.

2. 1987ஆம் ஆண்டு 15ஈம் இலக்க சட்டத்தினுடைய கட்டளைகள், 1988 ஆம் ஆண்டு நிதியியல் மற்றும் நிர்வாக ஏற்பாடு, கூட்டங்களை நடத்துவது தொடர்பான செயற்பாடு, உப விதிகள் மற்றும் சட்டத்துடன் தொடர்புபட்ட ஏனைய சட்ட திட்டங்கள் தொடர்பாக அறிந்திருத்தல் மற்றும் சபை தீர்மானங்களை மேற்கொள்ளும் போது விளக்கத்துடன் கதைத்தல் மற்றும் செயற்படல்.

(தொடரும்...)

# ராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 01.09.2020 - 20.03.2022

## எட்டில் வருகிறது ராகு... எதிலும் இனி கவனம் தேவை!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



துலாம் இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், செப்டெம்பர் முதலாம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 8ஆம் இடத்தில் இருக்கிறார். அதே நாளில் கேது பகவான் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்திலிருந்து 2ஆம் இடமான வாக்கு, தனம், குடும்பம் என்று சொல்லக்கூடிய இடத்திற்கு வரப்போகின்றார்.

இதற்கிடையில் நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுகின்றார். டிசெம்பர் 26ஆம் திகதி சனி, பெயர்ச்சியாகி மகர இராசிக்குச் செல்கின்றார். இக்காலத்தில் அர்த்தாஷ்டமச்சனியின் ஆதிக்கம் வருகின்றது. 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி குரு, கும்ப இராசிக்குச் செல்கின்றார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசியைப் பார்க்கின்றார். அதுமட்டுமல்லாமல் 9, 11 ஆகிய இடங்களையும் பார்க்கின்றார். இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்துக்கொண்டும், உங்கள் சுய ஜாதகத்தில் ராகு-கேதுக்களின் பலமறிந்து செயற்படுவதன் மூலமும் வெற்றிக் கனியை எட்டிப் பிடிக்கலாம். கிரகங்களின் சஞ்சாரம் பலமிழந்திருக்கும் பொழுது, பரிகாரங்களும், வழிபாடுகளும் ஓரளவு கை கொடுக்கும்.



அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கும் ராகு

### தனவரவைத் தரும் கேது

ராகு, இப்பொழுது சஞ்சரிக்கப்போவது எட்டாமிடமாகும். 'அஷ்டமத்தில் சஞ்சரிக்கப் போகின்றாரே' என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். 'மறைந்த ராகுவால் நிறைந்த தனலாபம் கிடைக்கும்' என்பது பழமொழி. மேலும் மகரத்தில் குரு சஞ்சரிக்கும் காலத்தில் குருவின் பார்வையில் ராகு இருப்பதால் பெரியளவில் பாதிப்புகளை ஏற்படுத்தாது. விரயம் வந்தாலும் வருவதற்கு முன்னதாகவே வரவு வந்து விடும். இதுபோன்ற சமயங்களில் விரயங்களை சுபவிரயங்களாக மாற்றிக்கொள்ளலாம். புதிய கூட்டாளிகளை இணைத்து தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்க கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது. யாருக்கேனும் வாக்குறுதி கொடுத்தால் அதைப் பிரயாசை எடுத்து தான் காப்பாற்ற இயலும். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனம். நீங்கள் செய்யும் பொறுப்பான பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைத்தால் முறையாக நிறைவேறாது. எதிலும் கொஞ்சம் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டிய நேரமிது.

### செவ்வாய் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 04.01.2021 வரை)

மிருகசீரிட நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, குடும்ப முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். பூமி வாங்கும் யோகம் முதல் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் யோகம் வரை ஒரு சிலருக்கு அமையும். நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும். நெருக்கமான உறவினர்கள் உங்கள் பணிக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொடுப்பர். பழுதடைந்த வீட்டை சீர்படுத்தும் வாய்ப்பு உருவாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

### சந்திரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (05.01.2021 முதல் 12.09.2021 வரை)

சந்திரன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பணியாளர் தொல்லை அகலும். முயற்சிகளில் இருந்த இடையூறுகள் அகலும். எதிர்நீச்சல் போட்டு இதுவரை காரியம் சாதித்த நீங்கள் இனி எளிய முறையில் காரியம் சாதிப்பீர்கள். மனக்கவலைகள் அகல உடனிருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உத்தியோகத்தில் சக பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். அரசு சார்ந்த வேலைக்கு விண்ணப்பித்திருந்தால் அது கிடைக்கலாம். வெளிநாடு செல்லும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சந்திரன் சாரத்தில் ராகு செல்வதால் இக்காலத்தில் நேர்மறைச் சிந்தனைகளை வளர்த்துக்கொள்வது நல்லது.

### சூரியன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (13.09.2021 முதல் 20.03.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதார விருத்தி அதிகரிக்கும். வர வேண்டிய பாக்கிகள் வசூலாகும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய வழிபிறக்கும். இளைய சகோதரத்துடன் இணக்கம் ஏற்படும். எதிர்பார்த்த சில காரியங்களில் இதுவரை இருந்த தடை அகலும். குறிப்பாக பணி நிரந்தரம் பற்றிய நல்ல செய்தி வரலாம். 'வேலைக்கு உரிய சம்பளம் கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு கூடுதல் சம்பளம் கிடைக்கும். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்களும் வந்து சேரும்.

### பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்

குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது பகவான் 'நிழல் கிரகம்' என்று வர்ணிக்கப்பட்டாலும், நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முன்னிற்பவர் ஆவார். பாதசார அடிப்படையில் பலன்களை அறிந்துகொண்டு செயற்படுவது நல்லது. பகை கிரகத்தின் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, அதற்குரிய பரிகாரங்களையும், வழிபாடுகளையும் செய்தால் நற்பலன்கள் கிடைக்கும்.

### புதன் சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 09.05.2021 வரை)

கேட்டை நட்சத்திரக்காலில் புதன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது வரவும், செலவும் சமமாக இருக்கும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். 'வருமானப் பற்றாக்குறை அகல என்ன செய்யலாம்?' என்று யோசிப்பீர்கள். பூர்வீக சொத்துக்களில் பாகப்பிரிவினை சம்பந்தமாக எடுத்த முயற்சி பலன் தரும். ஒத்து வராத சகோதரர்கள் இப்பொழுது ஒத்து




வருவர். இடமாற்றங்கள் இப்பொழுது எதிர்பார்த்த விதத்தில் அமையும். உடலுக்கு ஒவ்வாத உணவுகளை உட்கொள்ள வேண்டாம். பங்காளிப் பகை மாற எடுத்த முயற்சி வெற்றி தரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடியே அதிகப் பொறுப்புகள் வந்து ஆச்சரியப்பட வைக்கும்.

### சனி சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (10.05.2021 முதல் 16.01.2022 வரை)

உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார் சனி பகவான். அவரது சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது பொருளாதார ரீதியாக வந்த நெருக்கடிகள் அகலும். குடும்ப வருமானம் கூடுவதற்காக எடுத்த முயற்சி கைகூடும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம், வேலைவாய்ப்பு போன்றவை



சிறப்பாக இருக்கும். 'வாங்கிய சொத்தை விற்றுவிட்டோமே' என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவர். கடமையில் இருந்த தொய்வு அகலும். கணிசமான தொகை கைகளில் புரளும்.

### குரு சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (17.01.2022 முதல் 20.03.2022 வரை)

உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகை கிரகம் என்பதால் இக்காலத்தில் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள் நடைபெறும் நேரமிது. பிரச்சினைகளை அதிகம் சந்தித்தாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு குறையும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

எட்டாமிடத்து ராகுவால் இனிய பலன் கிடைக்கவும், தன ஸ்தானத்து கேதுவால் வருமானம் திருப்திகரமாக அமையவும் இல்லத்து பூஜை அறையில் விளக்கேற்றி வைத்து லட்சுமி கவசம் பாடி வழிபடுவது நல்லது. நிலைமை சீரான பிறகு பிரதோஷ வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும்.

### பெண்களுக்கான பலன்கள்

ராகு- கேது பெயர்ச்சியின் விளைவாக நற்பலன்கள் வந்து சேர நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. அஷ்டமத்து ராகுவால் அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. குடும்ப ஒற்றுமை அதிகரிக்க விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. சொத்துக்கள் உங்கள் பெயரில் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு கூடுதல் கவனம் தேவை. இடமாற்றம், விரயம் உண்டு. அறுபத்து மூவர் வழிபாடு அமைதியை வழங்கும்.

(தொடரும்)

# பாரதம்



அமெரிக்க அரசின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகளில் ஒன்றான தேசிய அறிவியல் கழகத்தின் இயக்குநராக அண்மையில் தமிழ்நாட்டு தமிழரான சேதுராமன் பஞ்சநாதன் தெரிவு செய்யப்பட்டார். இங்கு ஆராய்சி செய்தவர்கள் பலரும் நோபல் பரிசு உள்ளிட்ட எண்ணற்ற பரிசுகளையும் பாராட்டுக்களையும் வென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மும்பையில் நிலநடுக்கம்

(மும்பை)

மும்பையில் நேற்று திங்கட்கிழமை லேசான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதுடன், இதன் காரணமாக கட்டடங்கள் குலுங்கியதாகவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் மும்பை நகரின் வடக்குப் பகுதியில் 102 கி.மீ. தொலைவில் 5 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக நிலநடுக்கத்திற்கான தேசிய மையம் தெரிவித்துள்ளது.

இது 3.5 ரிக்டர் அளவுக்கோலில் பதிவாகியிருந்ததாகவும் நிலநடுக்கத்திற்கான தேசிய மையம் குறிப்பிட்டுள்ளது. நிலநடுக்கம் காரணமாக கட்டடங்களில் அதிர்வு ஏற்பட்டதுடன், இதனால் மக்கள் பீதி அடைந்துள்ளதாகவும் ஊடக ங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குறித்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# சீனமொழி திணிப்பிற்கு எதிர்ப்பு; வலுக்கும் போராட்டங்கள்

(டோக்கியோ)

சீன மொழி திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து பழங்குடி மங்கோலியர்கள் டோக்கியோ நகர தெருக்களில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



உலகளவில் அதிக மக் கள் தொகை கொண்ட நாடுக ளின் வரிசையில் சீனா முதல் இடத்தில் உள்ளது. அந்நாட்டில் மாண்டரின் என்ற மொழி பரவலாக மக்களால் பேசப்பட்டு வருகிறது.

சீனாவின் வடக்கு பகுதியில் மங்கோலிய பழங்குடி பிரிவினர் வசிக்கும் இன்னர் மங்கோலியா எனப்படும் உட்பகுதியானது சுயாட்சி பகுதியாக செயற்பட்டு வருகிறது. இந்நிலையில், சீனாவின் வடபகுதியில் மாண்டரின் மொழி கல்வியை புகுத்த அந்நாட்டு அரசு முயன்று வருகிறது.

இதற்காக வகுக்கப்பட்ட 3 ஆண்டு திட்டத்தின் கீழ், உள்ளூர் வரலாறு, இலக்கியம் மற்றும் பழங்குடி பாடபுத்தகங்களை நீக்கி விட்டு அவற்றுக்குப் பதிலாக மாண்டரின் மொழியைக் கொண்டு செல்ல முடிவு செய்துள்ளது. இது கலாசார அழிப்பு நடவடிக்கை என மங்கோலிய பழங்குடி சிறுபான்மையினர் ஆத்திரமடைந்து உள்ளனர்.

இந்த புதிய கொள்கைக்கு மறுப்பு தெரிவித்து பெற்றோர் தங்களது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப மறுத்து விட்டனர். கடந்த வாரம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மங்கோலியா பகுதியில் தெருக்களில் பேரணியாக சென்று தங்களது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

சீன ஜனாதிபதி ஜின்பிங்கின் தலைமையில் செயற்படும் சீன கம்யூனிஸ்டு கட்சி, பழங்குடியின சிறுபான்மையினரிடையே மாண்டரின் மொழியை தீவிரமுடன் உட்புகுத்தி, ஒட்டுமொத்தத்தில் சீனர்களின் அடையாளம் வெளிப்படும் வகையில் செயற்பட்டு வருகிறது என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறியுள்ளனர்.

அவர்களது சிறுபான்மையின மொழியானது அழிந்து வரும் சூழலில் உள்ள நிலையில், அண்மைய சீன அரசின் மாண்டரின் மொழி உத்தரவால் தங்களது மொழி முழுவதும் அழிந்து விடும் என்ற அச்சத்தில் அவர்கள் உள்ளனர்.

இதனை தொடர்ந்து ஜப்பான் நாட்டில் வசித்து வரும் பழங்குடி மங்கோலியர்கள் அந்நாட்டின் டோக்கியோ நகரில் சீன தூதரகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய அட்டைகளை கைகளில் ஏந்தியபடி, தெருக்களில் வரிசையாக நின்று தங்களது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். (2)

# ஜப்பா

➢தென்கொ

➢30 இற்கு

➢300 இற்கு

➢10 ஆயிர

➢2 இலட்சப்

(டோக்கியோ)

**ஜப்பானின் தெற்கு**

**"மேசக்" என்ற சக்தி வ**

**புயலால் ஏற்பட்ட பாதிப்**

**நிலையில் அங்கு ஹை**

**இந்த புயல் ஜப்பானின்**

**காரணமாக சூறாவளி**

ஜப்பானின் தெற்கு பகுதியை ஹைசென் என்ற சக்திவாய்ந்த புயல் தாக்கியதைத் தொடர்ந்து, சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்தது. இந்தப் புயல் ஜப்பான் கடற்கரையினூடாகக் கரையைக் கடக்க வாய்ப்புள்ளதாகவும் அப்போது மணிக்கு 160 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளி காற்று சுழன்று அடிக்கும் என எச் சரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும் புயலின் போது ஒகினாவா, ககோஷிமா, நாகசாகி மற்றும் குமாமோடோ ஆகிய மாகாணங்களின் மிக கன மழை

# அடுத்த ஆண்டு சந்திரயான் -3 விண்ணில்



(டில்லி)

நிலவில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக சந்திரயான்-3 விண்கலம் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் விண்ணில் செலுத்தப்படும் என மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.


இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சந்திரயான்-2 இல் இருந்த ஆர்பிட்டரைத் தவிர்த்து லேண்டர் மற்றும் ரோவர் கருவிகள் இதில் இடம்பெற்றிருக்கும்.

முன்னதாக முதல் சந்திரயான் செயற்கைக்கோள் அனுப்பியுள்ள ஒளிப்படத்தில் நிலவின் மேற்பரப்பு துருப்பிடித்து இருப்பதை போன்று காட்சியளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நிலவில் இரும்புச்சத்து நிறைந்த பாறைகள் இருப்பதாக கூறப்படுகிறது. அதேசமயம் நீர் மற்றும் ஒட்சிசன் இருப்பதாக தெரியாத நிலையில் துருப்பிடித்து இருக்கிறது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலவின் தென்துருவத்தில் இறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான் 2 விண்கலம் கடந்த ஆண்டு செலுத்தப்பட்டது. ஆனால் விண்கலத்தில் இணைக்கப்பட்டிருந்த லேண்டர் கருவி நிலவில் தரையிறங்கும்போது தரையில் மோதி செயலிழந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# விண்வெளிக்கு அனுப்பிய சீன விண்கலம் வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியது



(பீஜிங்)

விண்வெளிக்கு அனுப்பிய சீனாவின் விண்கலம் 2 நாட்களுக்கு பிறகு வெற்றிகரமாக பூமிக்கு திரும்பியது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் இணைந்து, விண்ணில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை அமைத்துள்ளது. இதற்குப்போட்டியாக, சீனாவும் விண்ணில் ஆய்வு மையத்தை அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக சீனா பல்வேறு விண்வெளி திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. அந்த வகையில் மறு பயன்பாட்டுக்குரிய விண்கலத்தை சீனா உருவாக்கியுள்ளது.

அந்த வகையில் விண்ணுக்குச் செல்லும் விண்கலம் தனது பணிகளை முடித்துவிட்டு வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய விண்கலத்தை பரிசோதிக்கும் விதமாக கடந்த வெள்ளிக்கிழமை ஜியுகு வான் நகரில் உள்ள ஏவுதளத்தில் இருந்து லாங் மார்ச் 2 எப் ரொக்கெட் மூலம் விண் கலம் விண்ணுக்கு அனுப்பப்பட்டது. இந்த விண்கலம் புவி வட்டப்பாதையில் வெற்றி கரமாக நிலை நிறுத்தப்பட்டதாக சீன தேசிய விண்வெளி நிர்வாகம் தெரிவித்தது.

இந்தநிலையில் 2 நாட்களுக்கு பிறகு சீனாவின் விண்கலம் நேற்று முன்தினம் வெற்றிகரமாக பூமிக்கு திரும்பியது. இதனை சீன தேசிய விண்வெளி நிர்வாகம் உறுதிப்படுத்தியுள்ளது. எனினும் விண்கலம் எங்கு எப்போது தரையிறங்கியது என்கிற கூடுதல் தகவல்கள் வெளியிடப்படவில்லை. அதேசமயம் இந்த வெற்றி சீனாவின் விண்வெளி திட்டத்தில் மிகப்பெரிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது. (2)

# னை தாக்கிய ஹைசென் புயல்



## ரியாவை நோக்கி நகர்கிறது

## ம் மேற்பட்டோர் காயம்

## தம் மேற்பட்ட விமானங்கள் இரத்து

## த்திற்கும் அதிகமான வீடுகளுக்கு மின்சாரம் துண்டிப்பு

## ம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைப்பு

**பகுதியில் உள்ள தீவுகளை, கடந்த வாரம் வாய்ந்த புயல் கடுமையாக தாக்கியது. இந்த யில் இருந்து ஜப்பான் இன்னும் மீண்டு வராத சென் என்கிற சக்தி வாய்ந்த புயல் உருவானது. தென்மேற்கு பகுதிகளைத் தாக்கியது. இதன் காற்றுடன் கனமழை பெய்தது.**



பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடல் அலைகள் மிகவும் சீற்றமாக காணப்படும் என்றும், தாழ்வான பகுதிகளில் உள்ள நீர் நிலைகளில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுமார் 2 இலட்சம் பேரைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்ற உத்தரவிடப்பட்டது. பள்ளிகள், சமூக கூடங்கள் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு செல்லும்படி மக்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

ஆனால் நெரிசலான பொது முகாம்களில்கொரோனா வைரஸ் பரவும் அபாயத்தை குறைக்க பெரும்பாலான மக்கள் புயல் அச்சுறுத்தல் இல்லாத பகுதிகளில் இருக்கும் ஹோட்டல்களில் தங்க முடிவு எடுத்துள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே ஹைசென் புயல் ஜப்பானின் தென்மேற்கு மாகாணங்களில் தொழிற்சாலைகள்,வணிக நிறுவனங்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளை மூடுவதற்கு வழி வகுத்துள்ளது.

மேலும் இந்த புயல் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதோடு, ரயில் சேவையும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.


அத்துடன் அமாமி ஓஷிமா தீவில் சரக்கு கப்பல் கவிழ்ந்ததில் மாயமான மாலுமிகளை தேடும் பணியை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஜப்பான் கடற்படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த புயல் ஏற்கனவே கணித்தபடி ஜப்பானில் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 10 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இந்தப் புயல் தென்கொரியாவின் இரண்டாவது பெரிய நகரமான புசான் நோக்கி செல்வதாக அந்நாட்டின் வானிலை நிறுவனம் தெரிவித்துள்ளது. 10 விமான நிலையங்களில் இருந்து இயக்கப்படும் 300 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. சில ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டன.

புயல் நகர்ந்து வருவதால், கொரிய தீபகற்பத்தில் ஜேஜு தீவு உள்ளிட்ட பகுதிகளில் பலத்த காற்று வீசத் தொடங்கியுள் ளது. இதன் காரணமாக 5000 இற்கும் மேற்பட்ட வீடுகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஜேஜு தீவு மற்றும் கியா ன் சாங் மாகாணம் உள்ளிட்ட நாட்டின் தென் பகுதிகளுக்கு புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(2)

# சட்டமன்ற தேர்தல் ஒத்திவைப்பை எதிர்த்து ஹொங்கொங்கில் போராட்டம்



## 300 பேர் கைது

(கின்சாஸா)

ஜனநாயக சார்பு ஆர்ப்பாட்டக் காரர்கள், உள்ளூர் சட்டமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் 300பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என நகர பொலிஸார் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இவர்களில் பெரும்பான்மையானவர்கள் சட்டசபைச் சட்டங்களை மீறியதாக கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் போராட்டம் ஆசிய நிதி மையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட நிலையில், போராட்டக்காரர்கள் சீனா கொண்டு வந்த புதிய தேசிய பாதுகாப்புச் சட்டத்துக்கும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஹொங்கொங்கில் கடந்த ஜூலை 31ஆம் திகதி நடைபெறவிருந்த சட்டமன்றத் தேர்தலை, நகரின் தலைமை நிர்வாகி கேரி-லாம் ஒரு வருடத்திற்கு ஒத்திவைத்தார்.

இந்தத் தேர்தல் திட்டமிட்டபடி நடந்திருந்தால் எதிர்க்கட்சி பெருவாரியான இடங்களைக் கைப்பற்றி ஆட்சிபீடம் ஏறும் என்ற அச்சநிலை காரணமாக தற்போதைய கேரி-லாம் அரசாங்கம் தேர்தலை ஒத்திவைத்ததாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, ஜூன் மாத இறுதியில் சீனா புதிய தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ஹொங்கொங்கில் அமுல்படுத்தியுள்ளமைக்கு அங்குள்ள மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டும் போராட்டங்களை நடத்தியும் வருகின்றனர்.

இந்நிலையில் போராட்டக்காரர்கள் மற்றும் ஜனநாயக ஆதரவாளர்கள் புதிய தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதாகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 2019 ஆம் ஆண்டு ஜூன் முதல் கிட்டத்தட்ட ஒவ்வொரு வார இறுதியில் ஹொங்கொங்கில் அரசாங்கம் மற்றும் சீன ஆதிக்கத்தை எதிர்த்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# புலிகளின் செயற்பாடுகளை முடக்க இன்டர்போலுடன் இணைந்து நடவடிக்கை

## வீரசேகர கர்ச்சிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை முடக்க சர்வதேச பொலிஸாருடன் (இன்டர்போல்) இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக புலிகளின் சர்வதேச நிதிச் செயற்பாடுகளை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

புலிகளின் தேவைக்காகவே மாகாண சபை முறைமை கொண்டு வரப்பட்டது. இன்றும் புலிகளின் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# இலங்கையின் இறைமைக்கு அமெரிக்கா பாதிப்பை ஏற்படுத்தாது

## அலைனா திட்டவட்டம்

(கொழும்பு)

**அமெரிக்காவின் செயற்பாடுகள் இலங்கையின் இறைமைக்கு ஒருபோதும் பாதிப்பை ஏற்படுத்தாதென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்ளிட்ஸ் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் உதவி திட்டங்கள் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், "அமெரிக்காவின் உதவி திட்டங்கள் எவையும் இலங்கையின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கத்தை கொண்டவையல்ல.

மேலும், பரஸ்பரம் இறைமையை மதித்து பாதுகாப்பதே வலுவான ஒத்துழைப்பு.

துரதிர்ஷ்டவசமாக எங்களின் பல திட்டங்கள் மற்றும் ஈடுபாடுகள் குறித்து அண்மைக் காலங்களில் பிழையான கருத்து காணப்படுகின்றது.

ஆனால், எங்களின் எந்தத் திட்டங்களும் இலங்கையின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்துபவையல்ல.

இலங்கைக்கான திட்டங்களை உருவாக்குவது நடைமுறைப்படுத்துவதில் நாங்கள் மிகுந்த வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகின்றோம்" என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# நியூடயமண்ட் கப்பலில் முற்றாக அணைக்கப்பட்டது தீ!



(கொழும்பு)

கடற்பரப்பில் தீப்பிடித்த எண்ணெய்க்கப்பலில் ஏற்பட்ட தீ முழுமையாக அணைக்கப்பட்டு விட்டதாக கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

அம்பாறை, சங்கமன்கண்டி இறங்கு துறையில் இருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால் உள்ள கடற்பிராந்தியத்தில் 2 இலட்சத்து 70 ஆயிரம் மெட்ரிக் தொன் மசகு எண்ணெயுடன் இந்தியா நோக்கிச் சென்ற பனாமா நாட்டுக்குச் சொந்தமான எம்.ரி.நியூடயமண்ட் என்ற கப்பலில் கடந்த 3ஆம் திகதி தீப்பரவல் ஏற்பட்டது.

கடற்படை, விமானப்படை துறைமுக ஆணையம், இந்தியக் கடற்படை மற்றும் இந்தியக் கடலோரக் காவல் படை ஆகியவை இணைந்து மேற்கொண்ட பாரிய தீயணைப்பு முயற்சிகளை மேற்கொண்ட நிலையில், கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில் தீப்பரவல் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டத்hாக கடற்படை உறுதிப்படுத்தியுள்ளது.(ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாழ்வின் முடிச்சுகள்!

காலைநேரம்.. சீடர்கள் எல்லாம் காத்துக் கொண்டிருந்தார்கள். புத்தர் வருகின்றார். அவர்கள் முன்னால் பேசுவதற்கு.வரும் பொழுது கையிலே ஒரு துணியை எடுத்துக் கொண்டு வருகின்றார். சின்ன துணி தான்... சாதாரணமாக கைக்குட்டை இருக்கும் அல்லவா... அதை விடக் கொஞ்சம் பெரிசு... அவ்வளவு தான். புத்தர் வந்து மேடையில் உட்கார்ந்தார்.

எதுவும் பேசவில்லை... பேசாமல் அந்தத் துணியிலே முடிச்சுக்கள் போட ஆரம்பித்தார்.

சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.. என்ன இது... வழக்கமாக பேசுவார்...இப்பொழுது அதற்கு நேர் மாறாக வேறு எதுவோ செய்து கொண்டிருக்கின்றாரே என்று பார்த்தார்கள்..சரி இருக்கட்டும் என்று சொல்லி மௌனமாக அதைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். புத்தர் தலை நிமிரவில்லை... அவர் பாட்டுக்கு முடிச்சு போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கின்றார்.

ஐந்து முடிச்சுக்கள் போட்டதன் பின்பு தலை நிமிர்ந்து பேச ஆரம்பித்தார்.சீடர்கள் இப்போது நான் ஐந்து முடிச்சுக்கள் போட்டேன். இதை அவிழ்க்கப் போகிறேன்... அவிழ்ப்பதற்கு முன்னர் உங்களிடம் இரண்டு கேள்வி கேட்கப் போகின்றேன்.முதல் கேள்வி என்ன என்றால்...

முன்னர் நான் வைத்திருந்த துணியும்... முடிச்சுக்கள் விழுந்த இந்தத் துணியும் ஒன்று தானா? என்று கேட்டார். உடனே ஒரு சீடன் எழுந்து கொண்டான் (ஆனந்தன்)

" பெருமானே ஒரு வகையிலே எல்லாம் ஒன்று தான். முன்னாள் இருந்ததும் இப்பொழுது இருப்பதும் ஒன்று தான். முடிச்சுக்கள் மட்டும் தான் அதிலே வித்தியாசம். ஒரு சின்ன மாற்றம் ஏற்பட்டிருக்கு.. அவ்வளவு தான்.

முன்னர் இருந்த துணி சுதந்திரமுடையது. முடிச்சு விழுந்ததும் அதன் சுதந்திரம் போய்விட்டது. இப்பொழுது இந்தத் துணி அடிமைப்பட்டுக் கிடக்கின்றது" அப்படி என்றான்.

" ஆமாம்.நீ சொல்வது சரி தான். ஒரு வகையில் ஒரே துணி தான் . இன்னொரு வகையில் வேறுபட்டிருக்கின்றது.

எல்லோருமே இயல்பிலே கடவுள் தான்.

ஆனால் முடிச்சுப் போட்டுக் கொண்டு.. சிக்கலிலே மாட்டிக் கொண்டு அடிமைப்பட்டுப் போய்விடுகின்றார்கள். நாம் எல்லோரும் அடிப்படையிலே புத்தர்கள் தான்... ஆனால் தனிமைப்பட்டுப் போய் தனித்தனியே உலகங்களை சிருஷ்டித்துக் கொண்டு.அதிலே சிக்கிக் கொண்டு தனிமைப்பட்டுப் போய்விடுகின்றார்கள். இந்த முடிச்சுக்கள் மாதிரி. இதைத்தான் நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்பினேன் என்றார்.

கொஞ்ச நேரம் கழித்து அடுத்த கேள்வியைக் கேட்டார்.

" இந்த முடிச்சுக்களை அவிழ்க்க வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்? " என்று கேட்டார்.

இன்னொரு முக்கியமான சீடன் எழுந்து கொண்டு நின்றான். (சாரிபுத்திரன்)

" குருவே அதை அவிழ்க்க வேண்டும் என்றால்... நான் அருகில் வர அனுமதிக்க வேண்டும். முடிச்சுக்கள் எப்படி போடப்பட்டிருக்கின்றது தெரியாத வரையிலே அதை அவிழ்க்க வழியில்லை. முடிச்சு போட்ட முறை தெரிந்தால் அதை அவிழ்க்கிறது சுலபம். நெருங்கிப் பார்க்காமல் எதுவும் செய்ய முடியாது. நிறைவோடு செய்தால் முடிச்சுக்கள் எளிமையாக அவிழும். நினைவில்லாமல் விழுகின்ற முடிச்சுக்கள் மிகவும் சிக்கலானவை. சிலசமயம் அவிழ்க்கவே முடியாமல் கூட போய் விடலாம் என்றான். புத்தர் நிமிர்ந்து பார்த்தார்.

" நீ சொன்னது சரி தான். அது தான் வாழ்க்கை. அது தான் வாழ்க்கையின் சிக்கல் " என்றார் புத்தர்.

இதனுடைய விளக்கம் என்ன என்றால்...

கணியன்பூங்குன்றனார் சொன்னாரே " தீதும். நன்றும் பிறர் தரவாரா " என்று அது தான்.

நம்முடைய சிக்கல்களுக்கு நாம் தான் காரணம்.

நம்மை அறியாமலே ... விழிப்புணர்ச்சி இல்லாமல் நாம் போட்டுக் கொள்கின்ற முடிச்சுக்களிலே சிக்கி சிக்கலை அவிழ்க்க முடியாமல் திணறிக் கொண்டு இருக்கின்றோம் நாம்.

இது தான் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றது. எப்பொழுது தான் நாம் முழித்துக் கொள்ளப் போகின்றோமோ தெரியவில்லை. வில்லை.நம்முடைய ஆள் ஒருத்தன் சொன்னான்.

"எதிர்த்த வீட்டுக்காரன் இருக்கானே.. அவனால் எனக்கு எப்பவும் சிக்கல் தான் சேர்." ஏன் அப்படி சொல்கின்றாய் " என்று கேட்டேன்.

" எப்ப பார்த்தாலும் நூறு ரூபா கொடு நூறு ரூபா கொடு என்று கேட்டு என்னை அரித்துக் எடுத்துவிடுவான் சேர். அப்படி என்றான்.

நீ இல்லை என்று சொல்ல வேண்டியது தானே " என்றேன்.

" அது எப்படி வாங்கிய கடனை இல்லை என்று சொல்ல முடியும் " என்றான்.


# கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரி

# ஹெரோயினுடன் தனுஸ்கோடியில் கைது

## இந்தியாவிடம் விபரங்கள் கோரும் பொலிஸார்

**(கொழும்பு)**

**மீகஹாவத்த - சப்புகஸ்கந்த பகுதியில் 23 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளை மறைத்து வைத்திருந்ததாக கூறப்படும் கொழும்பு குற்றப் பிரிவின் அதிகாரி இந்தியா - தனுஸ்கோடியில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில் குறித்த கைது தொடர்பில் இந்திய தரப்பிடம் விபரங்களை கோரியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.**



மீகஹாவத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சப்புகஸ்கந்த பகுதியில் கடந்த புதன்கிழமை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 23 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர்கைது செய்ய்ப்ட்டார்.

சந்தேகநபரால் நடத்தப்பட்டு வந்த தச்சு நிலையத்திலிருந்து மீட்கப்பட்ட ஒலிபெருக்கிகள் இரண்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலே, இந்த ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டிருந்தது.

இதன்போது சப்புகஸ்கந்த பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் , அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது குறித்த ஹெரோயின் போதைப் பொருள் கொழும்பு குற்றப் பிரிவில் பணியாற்றி வந்த அவருடைய சகோதருடையது என்று அவர் கூறியதாக தெரிவித்திருந்தனர்.

கொழும்பு குற்றப் பிரிவில் பணியாற்றியதாக கூறப்படும் சந்தேக நபர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் அவரை கைது செய்வதற்கு எதிர்பார்த்திருந்த போதும். அவரை இதுவரையில் கைது செய்யவில்லை.

இந்நிலையில் இந்தியாவின் - தனுஷ்கோடி பகுதியில் இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக சென்ற நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ளவராகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவர் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் கொழும்பு குற்றப் பிரிவின் அதிகாரி என்றும் தெரியவந்துள்ளன.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் .சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவிக்கையில்,

இந்நாட்டைச் சேர்ந்த நபரொருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால் அது தொடர்பில் இந்தியாவிலிருந்து உத்தியோகபூர்வமாக எமக்கு எந்த அறிவிப்புகளும் கிடைக்கப் பெறவில்லை. இதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இராஜதந்திர முறையில் இந்தியாவிற்கு அறிவித்துள்ளோம். தகவல்கள் கிடைக்கப் பெற்றதும், அதனை நாட்டுக்கு தெரியப்படுத்துவோம் என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# ஊவா மாகாண ஆளுநர் கடமைகள் பொறுப்பேற்பு

(கொழும்பு)

ஊவா மாகாண ஆளுநராக ஏ.ஜே.எம்.முஸம்மில் உத்தியோக பூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

ஊவா மாகாண ஆளுநர் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை காலை மத வழிபாடுகளின் பின்னர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.



இந் நிகழ்வில் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சுதர்ஷன தெனிபிட்டிய, சாமர சம்பத் தஸநாயக்க, டிலான் பெரேரா, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், பொதுமக்கள், சர்வமதத் தலைவர்கள் மற்றும் இராணுவம், பொலிஸ் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஊவா மாகாணத்தின் ஆளுநராக அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## சுவர் இடிந்து விழுந்ததில் ஒருவர் பலி; இருவர் காயம்

(கொழும்பு)

நவகமுவ, கொத்தலாவல பகுதியில் வீட்டுச்சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்ததுடன் இருவர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. காயமடைந்தவர்கள் மலாபேயில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-4)

# சுற்றிவளைப்பில் 1229 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட 12 மணிநேர சிறப்பு பொலிஸ் சோதனை நடவடிக்கையில் 1229 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சிறப்பு சோதனை நடவடிக்கையானது நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் நேற்றுக்காலை 6 மணி வரை நடத்தப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 519 பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 73 பேரும் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளிலும் 637 பேரும் அடங்குவர். (ஐ-4)

# புதிய அரசியலமைப்பில் சர்வாதிகாரத்திற்கு இடமில்லை

## மகிந்த அமரவீர திட்டவட்டம்

(கொழும்பு)

20 ஆவது திருத்தம் ஊடாக சர்வாதிகார ஆட்சி முன்னெடுக்கப்படமாட்டாது என சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலமைப்பு மாற்றங்கள் காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள 20 ஆவது திருத்தம் தொடர்பில் மக்களை திசை திருப்பும் வகையில் பலர் கருத்துக்களை முன்வைக்கின்றனர். ஆனால் அரசியல்மைப்பில் குறிப்பிட்டுள்ள நல்ல விடயங்கள் எவையும் அகற்றப்படமாட்டாது.

சர்வாதிகார ஆட்சி முன்னெடுப்பதற்காகவே அரசியலமைப்பு திருத்தம் மேற்கொள்வதாக இன்று பலர் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறமாட்டாது. முழுமையான அரசியலமைப்பு மாற்றம் எதிர்வரும் ஒருவருட காலப்பகுதிக்குள் முன்னெடுக்கப்படும் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன் என அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள்

## ஓர் உலகளாவிய ஆய்வு

61

கலாநிதி முருகர் குணசிங்கம்

அவர்கள் பற்றிய புள்ளிவிபரம் மேற்படி புள்ளிவிபரங்களில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியாவில் வாழும் ஈழத் தமிழர்களின் பிள்ளைகள் அந்த நாட்டில் சிறந்த கல்வி வாய்ப்புகளைப் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

குறிப்பாக தொழில் துறைகளான மருத்துவம், விஞ்ஞானம், சட்டத்துறை, கலைத்துறை, கணனித்துறை, கணக்கியல்துறை போன்ற சகல அறிவியல் சார்ந்த துறைகளிலுமான விஞ்ஞானக் கல்வியை சகல பல்கலைக்கழகங்களிலும் பெறக்கூடிய வாய்ப்புகள் அவர்களுக்கு உண்டு.

பன்னிரண்டாம் வகுப்பில் அதிக புள்ளிகள் எடுக்கும் மாணவர்கள் மருத்துவம், சட்டத்துறை போன்ற துறைகளில் கற்கக்கூடிய வாய்ப்பும் அதற்கான புலமைப்பரிசில்களைப் பெறக்கூடிய வாய்ப்புகளும் கூடுதலாகக் காணப்படுகின்றன.

அவுஸ்திரேலிய அரசு கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதாந்தம் மானியமாகச் சுமார் ஆயிரம் டொலர்கள் வரை வழங்குகின்றது.

ஆனால் அதிக வருமானம் உள்ள பெற்றோரின் பிள்ளைகளுக்கு வழங்கப்படமாட்டாது.

மேலும் பல்கலைக்கழகம் சென்று படிப்பவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகைப்பணம் பங்களிப்பாக வழங்க வேண்டும். (**Higher Education Contribution**) ஆனால் அந்தப் பணத்தொகையை அரசாங்கம் அப்பல்கலைக்கழகங்களுக்கு வங்கிகள் மூலம் வழங்கும்.

பின்னர் அந்த மாணவர்கள் படித்து முடித்துத் தொழில் பார்க்கத் தொடங்கியவுடன் அவர்களின் மாதாந்தச் சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை மாதாமாதம் மீளப் பெற்று தாம் வழங்கிய தொகையை முழுமையாக அறவிட்டுக் கொள்வார்கள்.

இவ்வாறான வசதிகளும் சலுகைகளும் தமிழ் மாணவர்கள்ளக் கல்வியில் மிகவும் அக்கறை கொண்டு படிக்கத் தூண்டுகின்றது.

அவர்களது பெற்றோரும் ஊக்கப்படுத்துகின்றனர். படித்து முடிந்தவுடன் அவுஸ்திரேலியாவில் வேலைவாய்ப்புகளைப் பெறுவதும் எளிது. தமது தகுதி விருப்பத்திற்கு ஏற்ற தொழிலைப் பெற முடிகின்றது.

இத்தகைய சூழ்நிலையில், தமிழ் இளம் தலைமுறையினருள் 90 விழுக்காட்டினர் தமது பல்கலைக்கழகக் கல்விக்கு முதலிடம் கொடுத்து வருகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான புள்ளிகளை எடுக்கத் தவறியவர்களுக்கு பல்வேறுபட்ட தொழில்நுட்பக் கல்லூரிகளில் தாம் விரும்பிய துறைகளில்படிக்கக் கூடிய வாய்ப்பினையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கி இருக்கின்றது.

இத்தகைய வாய்ப்புகள், ஈழத்தமிழ்ச் சிறார்களுக்கு ஒரு நல்ல வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும்.

மேற்கண்ட கல்வி, தொழில்சார் நிலைமைகளே ஈழத்தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளிலும் பொதுவாகக் காணப்படுகின்றன.

எனவே ஒவ்வொரு நாட்டிலும் உள்ள கல்வி,தொழில் வாய்ப்புக்கள் பற்றித் தனித்தனியாக ஆய்வு செய்யாது, குறிப்பிட்ட சில ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளில் உள்ள நிலைமைகள் பற்றி மேற்கொண்டு ஆய்வு செய்வது பொருத்தமானதாக அமையும்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக சுவிட்சர்லந்து நாட்டை எடுத்துக் கொண்டு, அங்குள்ள ஈழத்தமிழர்களின் கல்வி, வேலைவாய்ப்பு நிலைமைகளைச் சுருக்கமாக நோக்குவதன்மூலம், ஏனைய மேற்கு ஐரோப்பிய ஸ்கண்டிநேவிய நாடுகளிலும் அதே நிலைமைதான் பொதுவாகக் காணப்படும் என்ற முடிவிற்கு வரக்கூடியதாக இருக்கும்.

ஆங்கிலமொழி நடைமுறையில் உள்ள கனடா தவிர்ந்த ஏனைய நாடுகளான அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் படித்துப் பட்டம் பெற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

அதன் பயனாக பலர் தமது தொழில்சார் கல்வித்துறை சார்ந்த தொழில்களில் அரசு, தனியார் நிறுவனங்களில் தொழில் புரியும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

ஏற்கனவே கலந்துரையாடப்பட்ட அவுஸ்திரேலியா நாட்டில் வாழும் ஈழத் தமிழர்களை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் சுவிட்சர்லாந்து நாட்டுக்கு அகதிகளாகச் சென்ற ஈழத்தமிழர்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையினரே படித்துப்பட்டம் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

சுவிட்சர்லாந்து நாட்டுக்கு குடிமக்கள் மற்றும் அங்கு புலம்பெயர்ந்து வாழும் ஏனைய இனத்தவருடன் ஒப்பிடுகையில், இருபத்தைந்து வயதிற்கு மேற்பட்ட ஈழத்தமிழர்களுள் பெரும்பான்மையினர் கல்வித் தகைமை குறைந்தவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

சுமார் 65 விழுக்காடு ஈழத்தமிழர்களின் முதலாவது தலைமுறையினர் சாதாரணக் கல்வி மட்டுமே சுற்றவர்களாகவே இருப்பதைப்புள்ளி விபரங்கள் காட்டி நிற்கின்றன.

இதேபோன்ற நிலைமைதான் அநேகமாக கனடாவில் ஏனைய ஆங்கில மொழி நடைமுறையில் இல்லாத நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் இடையே காணப்படுகிறது.

மேலும், சுவிட்சர்லாந்து நாட்டில் ஆங்கில மொழி நடைமுறையில் இல்லாமையினாலும் அங்கு



சுவிட்சர்லாந்து பல்கலைக்கழகம்

பேசப்படுகின்ற பிரெஞ்சு, டொச்சு மொழிகளில் தேர்ச்சி இல்லாமையினாலும் அவர்களால் அரச, தனியார் துறைசார்ந்த அலுவலகத் தொழில்களைப் பெரிதாகப் பெற முடியவில்லை.

அதன்விளைவாக சுமார் 70 விழுக்காடு ஈழத்தமிழர்கள் தொழிற்றிறன் அற்ற (**Unskilled**) சாதாரணமான வேலைகளைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

2000 ஆம் ஆண்டில் சுமார் 38 வீதமான முதலாவது தலைமுறை ஈழத் தமிழர்கள் மிகவும் குறைவான சம்பளம் பெறக்கூடிய தொழில்களான, சுத்தம் செய்யும் தொழில் (**Cleaning jobs**) உணவகங்கள் (**Restaurants**), சமையல் கட்டு (**Kitchen**), உல்லாச விடுதிகள் (**Hotels**), வைத்தியசாலைகள் (**Hospitals**), முதியோர் இல்லங்கள் (**Elder's Homed**) போன்றவற்றில் கூலித் தொழில் வேலை செய்பவர்களர்கவே காணப்படுகின்றனர்.

20 வீதமான படித்த கல்வித் தகைமை பெற்ற முதல் தலைமுறையினருள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் அரச, தனியார் துறைகளில் (**White Collar Jobs**) அலுவலர்களாகத் தொழில் புரிகின்றனர்.

சிறு எண்ணிக்கையினர் திறமைசார் தொழில்துறைசார், தொழில் துறைகளிலும் (**Skill Job**) நிர்வாகத் துறைகளிலும் தொழில் புரிகின்றனர். ஆனால் சுவிட்சர்லாந்து நிரந்தர வதிவிட உரிமை கிடைக்காமல் பல ஈழத்தமிழர்கள் வாழ்கின்றனர் என்பது பற்றி இரண்டாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களுக்கு சேவை செய்வதற்குரிய அனுமதிப்பத்திரங்களை (**Work permit**) பெறுவதிலும் சட்டப் பிரச்சினைகள் இருப்பதை அறிய முடிகிறது.

அவ்வாறானவர்கள் சாதாரணமான கூலித் தொழில்களைச் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

படித்த பட்டம் பெற்ற பலர் சாதாரணத் தொழில்கள் மூலம் உழைத்து பெரும் பணத்தைக் கொண்டு சென்று இலங்கையில் நல்ல வசதியான வாழ்க்கையை அமைத்து உயர்ந்த பதவிகளிலும் உள்ளார்கள். எது எப்படி இருப்பினும், சுவிட்சர்லாந்தில் வாழும் முதலாவது தலைமுறை ஈழத்தமிழர்களுள் 90 விழுக்காட்டினர் தொழில் புரிவதாகவே புள்ளி விபரங்களில் தெரிய வருகின்றது.

மேற்கண்ட நிலைமைகளை நோக்கும்போது, ஈழத் தமிழர்கள் எந்த நாட்டில் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் நிலைமைக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக்கொண்டு, எந்தத் தொழிலைச் செய்யவும் (**Versatile attitude**) ஆயத்தமாக இருக்கின்றார்கள் என்பதையே காண முடிகின்றது.

ஈழத்தமிழர்கள் பற்றிய எந்த ஆய்வுகளையும் அறிக்கைகளையும் ஆராய்ந்து பார்த்தபொழுது மேற்கண்டவாறே சகல ஆய்வாளர்களும் வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளனர்.

தமது பிள்ளைகளுக்குத் தகுந்த தொழில்சார் கல்வியை வழங்குவதற்காகத் தமிழ்ப் பெற்றோர் கடுமையாக உழைக்கின்றார்கள். சுவிட்சர்லாந்தில் வாழும் இளம் தலைமுறையினர் தமது தொழில்சார் கல்வித்துறைகளில் முன்னேறி வருவதைக் காண முடிகின்றது.

அத்துடன் அவர்கள் பிரெஞ்சு, டொச்சு, தமிழ்மொழிகளில் பேசுகின்ற, எழுதுகின்ற திறமையையும் பெற்று இருக்கின்றார்கள்.

1994 இல் சுவிட்சர்லாந்து தமிழ்ப் பாடசாலைகள் தொடங்கப்பட்டு, அதன் பதினாறாவது ஆண்டில் அதாவது 2010 இல் நடத்திய பத்தாம் ஆண்டிற் கான தமிழ்மொழித் தேர்வுகளில், சுவிட்சர்லாந்தில் உள்ள 46 நிலையங்களில் சுமார் 4600 தமிழ் மாணவர்கள் பங்கு ஏற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

# கொரோனா பின்னடைவிலிருந்து மீள பிம்ஸ்டெக் நாடுகள் ஒத்துழைப்பது அவசியம்

## வெளிவிவகார செயலர் வலியுறுத்து

(கொழும்பு)

**பிம்ஸ்டெக் அங்கத்துவ நாடுகள் கொவிட் - 19 காரணமாக ஏற்பட்ட பின்னடைவிலிருந்து மீள்வதற்கு ஒன்றிணைந்து ஒத்துழைப்புடன் செயலாற்றுவது அவசியமாகும் என வெளிவிவகார செயலாளர் ரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே சுட்டிக்காட்டியுள்ளார்.**

உலகளாவிய ரீதியில் கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்ட அச்சுறுத்தல் நிலை காரணமாக பல நாடுகளின் அன்றாட நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. எனினும் அந்த முடக்கம் பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதனால், தற்போது உரிய சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றியவாறு மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என உலகநாடுகள் அறிவுறுத்தியிருக்கின்றன.

தற்போது நடைமுறையில் இருக்கும் இந்த "புதிய இயல்பு நிலைமையை" பின்பற்றி செயற்படுமாறு பிம்ஸ்டெக் அங்கத்துவ நாடுகளை இலங்கை வலியுறுத்தியுள்ளது.

அந்தவகையில் பிம்ஸ்டெக் அங்கத்துவ நாடுகளின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கான இணையம் மூலமான 21 ஆவது கூட்டத்தின் போதே "சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுடன் கூடிய புதிய இயல்பு நிலையைத் தழுவிநடப்பதுடன், விரைவாக அதற்குப் பழக்கப்பட வேண்டும்" என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.



"ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் குறிப்பிட்டவாறு கொவிட் - 19 வைரஸ் பரவல் ஆரம்பத்தில் ஒரு சுகாதார நெருக்கடியாகக் காணப்பட்டு, தற்போது அது பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியாக மாற்றமடைந்துள்ளது.

இது உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளின் மீது பல மட்டங்களில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

எனவே கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்னரைப்போன்ற நிலையில் உலகம் தற்போது இல்லை" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# ஹிஸ்புல்லா,முஜிபுர்,பிள்ளையான்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆணைக்குழுவில்







(கொழும்பு)

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் பொலிஸ் பிரிவில் நேற்று முற்பகல் முன்னிலையாகினர்.

கடந்த வெள்ளிக்கிழமை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகி 6 மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கிய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட 6 பேர்நேற்றுக் குறித்த ஆணைக் குழுவில் சாட்சியமளித்தனர். (ஜ-4)



# மகிந்த ஓய்வு பெற்றபின் பசில் பிரதமராவார்?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இன்னும் ஈராண்டுகளில் அரசியலில் இருந்து ஓய்வு பெறவுள்ளார் என தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி ஐந்தாண்டுகளும் அவர் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கமாட்டார் எனவும் அவர் பதவி விலகிய பின்னர் அவரின் சகோதரர் பசில் ராஜபக்ஷவுக்குப் பிரதமர் பதவி வழங்கப்படலாம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

"அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் ஊடாக, இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றம் வருவதற்கான தடை நீக்கப்பட்டுள்ளது.

எனினும், 20 ஐ நிறைவேறிய கையோடு பசில் பாராளுமன்றம் வரமாட்டார் எனவும் மகிந்தவின் ஓய்வின் பின்னரே அவர் வருவார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ-4)


## சுகாதார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு



(நெளுக்குளம்)

வவுனியா நகரசபை சுகாதார ஊழியர்களில் ஒரு பகுதியினர் சம்பள ஏற்றம் வழங்கப்படாமை, சம்பள மீளாய்வு செய்யப்படாமை, உள்ளக வெற்றிடங்கள் நிரப்பப்படாமை எனப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா நகர சபையில் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (5)

# மரங்கள் முறிந்து விழுந்ததில் பயிற்சி நிலையம் சேதம்



(கொழும்பு)

மாரவில-மூதுகட்டுவ பிரதேசத்தில் இயங்கிவரும், தொழிற் பயிற்சி அதிகார சபை பயிற்சி நிலையத்தின் மீது, நேற்று முன்தினம் இரவு, இரண்டு மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.

அதனால் பயிற்சி நிலையத்துக்குப் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

மழையுடனான கடும் காற்றையடுத்து, ஆங்காங்கே இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியுள்ளன. முறிந்து விழுந்த மரங்களை வெட்டி அகற்றும் பணிகளில், இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளன்ர். (ஜ-4)

# பாதாளக்குழுக்களை கட்டுப்படுத்தாவிட்டால் எமது நாடு சோமாலியாவாக மாறிவிடும்


## பாதுகாப்பு செயலர் எச்சரிக்கை

(கொழும்பு)

**பாதாள உலக கோஷ்டியை கட்டுப்படுத்தா விட்டால் நாடு சோமாலியாவாக மாறிவிடும் என பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ன கடுமை யாக எச்சரித்துள்ளார்.**

நேற்று முன்தினம் இடம் பெற்ற கோட்டாபய நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, பாதாள கோஷ்டி ஆகிய தனது இரு நூல்கள் வெளியீட்டு நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

5வருடங்களில் 7 புத்தகங்களை எழுத கிடைத்தமை தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். எமது நாட்டிற்கு பாரிய பிரச்சினையாகவுள்ள பாதாள கோஷ்டி மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு



எதிராக எமது நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும்.

பாதாள உலகக் கோஷ்களின் ஆதிக்கம் தொடர்ந்தால் எமது நாடு 5 அல்லது 10 ஆண்டுகளில் சோமாலியாவை விட மோசமான நிலைமைக்கு மாறுமென எச்சரித்துள்ளார்.

எனவே எமது நாட்டின் எதிர்காலத் சமூகத்தை பாதுகாக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

---

## தனிமைப்படுத்தப்படும் கைதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

தனிமைப்படுத்தப்படும் கைதிகளின் எண்ணிக்கையை 1000 ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது சுமார் 500 கைதிகள் வீதம் தனிமைப்படுத்தப்படும் நிலையில் அதனை 1000 ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-4)

## தமிழ் மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் தமிழ்த்தரப்பினர்-வீரசேகர

(கொழும்பு)


இந்தியாவை எமக்கெதிராகத் தூண்டிவிட நினைக்கும் தமிழ்த்தரப்பினர் அரசை நெருக்கடிக்குள் தள்ளுவதாக நினைத்து தமிழ் மக்களையே நெருக்கடிக்குள் தள்ளுகின்றன என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர குற்றஞ் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார். (ஜ-4)

---


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2109

### கனு



எதேச்சையாக ஒரு புகைப்படக்காரருக்கு அமைந்த அருமையான புகைப்படம்

### சபிதா




பொறுமை, ஒழுக்கம், விடாமுயற்சி தானாக மேலே கொண்டு போய்விட்டுடும். பொறாமை, ஆணவம், அகங்காரம் தானாக கீழே விழுந்து நம்மையும் தவிடு பொடியாக்கிடும்..!!!

### மஞ்சு



வலிக்காமல் இரத்தம் உறிஞ்சும் Blood bank இந்த வெளிநாடு...!!!

### சக்தி




தேடித் தேடித் திரிவதால் என்னவோ சிலருக்கு தேவையற்றவர்களாகவே நாம் எப்போதும் இருக்கின்றோம்

### அபிஷா



எதை இழந்தாலும் வருந்தாதே அது இன்னொரு வடிவில் உங்களை வந்து சேரும்

### கர்ஷன்




முதலிலும் சரி முடிவிலும் சரி நீங்களே உங்களுக்கு தலை சிறந்த போட்டியாளன்..!!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாதாள உலகக்குழுவினரை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

**தென்மாகாணத்தில் இழுவைப் படகுகள் மூலம் மீன் பிடிப்பது என்ற போர்வையில் ஆழ்கடலுக்குள் தப்பியோடும் பாதாள உலகக் குழுவினரை கைது செய்வதற்கு பொலிஸார் சிறப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர்.**

பலரும் மீன் பிடிப்பது என்ற போர்வையில் கடலில் பலநாள் தரித்து நிற்கும் இழுவைப் படகுகளில் ஆழ்கடல்களுக்கு தப்பி ஓடுவதாகத் தெரியவந்ததன் அடிப்படையில் குறித்த நடவடிக்கையை பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.

இந்த பாரிய இழுவைப்படகுகள் சுமார் 2 மாதங்கள் கடலில் இருப்பதால் பாதாள உலக உறுப்பினர்கள் தப்பிக்க இந்த தந்திரத்தை பயன்படுத்துவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)



# ஆன்மீகம்

## புறஞ்சொல்லும் பாவத்துக்குப் பரிகாரமே இல்லை!



உலக உயிர்கள் அனைத்தையும் தன் அன்புக் கரங்களால் அரவணைத்தவரே அருட்பிரகாச ராமலிங்கர். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று பாடிய அவர் சில மனிதர்களின் பக்கம் கூட தன் தலை வைத்து படுக்கக் கூடாது. அவர்களின் உறவு அறவே எனக்குத் தேவையில்லை என்று கூறுகிறார். இரக்கமே வடிவான ராமலிங்கர் யாரைப் புறம் தள்ளுகிறார் தெரியுமா? புறம் பேசும் பொல்லாங்கு மனிதர்களைத்தான்! உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்! ஒருவருடைய முதுகுக்குப் பின்னால் முணுமுணுப்பதும், அவரைப் பற்றி முழு நீளக் கதை படிப்பதும், இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக் கட்டி ஏதேதோ பேசுவதும் பலருக்கு இனிப்புப் பண்டம் சாப்பிடுவது போல் இருக்கிறது. அப்படி புறம் பேசுபவர்களின் சொற்களை சுவாரஸ்யமாகக் கேட்பதற்கும் ஒரு கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது.

இந்தச் சமூக அவலம் அடியோடு களையப்பட வேண்டிய ஒன்று. 'இன்சொல்லே பேசுக! வன்சொல் தவறியும் உன் வாயினின்று வெளிப்படக்கூடாது' என்று கண்டிப்பாக கூறிய திருவள்ளுவர் கூட சற்று மாற்றிப் பேசுகின்றார். ஒருவரின் நடவடிக்கை உனக்குப் பிடிக்கவில்லை என்றால், அதை அவர் மாற்றிக் கொண்டால் நல்லது என்று நீ நினைத்தால், வன்சொற்களைத்தான் அதற்குப் பயன்படுத்த வேண்டும். அப்போது தான் அவர் திருந்துவார் என்று நீ எண்ணினால் அவர் முகத்துக்கு நேராக கடுஞ்சொற்களைக் கூறு! பரவாயில்லை. ஆனால், அவர் இல்லாதபோது அவர் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் அவரைப் பற்றி புறம்பேசாதே! பழிச்சொற்களைக் கூறாதே! அது பெரியபாவம் என்று அறிவுறுத்துகிறார் ஆசான் திருவள்ளுவர்.


'கண் நின்று கண் அறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின் நோக்காச் சொல்.

புறம்பேசுதல் பலருக்கு ஒரு பொழுது போக்காகவே மாறிவிட்டது. 'சின்னஞ் சிறுகதைகள் பேசும் வேடிக்கை மனிதர்' என்று இவர்களைச் சாடுகிறார் மகாகவி பாரதியார். இளமைப் பருவத்திலேயே இப்படிப்பட்ட தீய பழக்கம் ஒருவனைத் தீண்டி விடக் கூடாது என்பதால் தான், தான் பாடிய புதிய ஆத்திசூடியில் 'தூற்றுதல் ஒழி!' என்றும், பாப்பா பாட்டில், 'பொய் சொல்லக் கூடாது பாப்பா' என்றும் புறம் சொல்லல் ஆகாது பாப்பா' என்றும் பாடி வைத்தார் பாரதியார். குருநாதர் ஒருவரிடம் இரண்டு சீடர்கள் பயின்று வந்தனர். இருவரும் ஒருவரோடு ஒருவர் அன்பு பூண்டும் ஒத்த நண்பர்களாகவும் விளங்கினர். அவ்வாறே குருவும் இருவரிடமும் சமமான அன்பையே காட்டி வந்தார். ஒரு சீடர் கற்றுக்கொடுத்த பாடங்களையெல்லாம் பிழையற அடுத்த நாளே ஒப்பிக்கும் ஆற்றல் உடையவர். இன்னொருவருக்கு பாடம் மூளையில் ஏற சில நாட்கள் ஆகும்.

ஆனால், குருவிற்குச் செய்யும் பணிவிடைகளிலே சிறப்பிடம் பெற்று விளங்கிடுவார். ஒருநாள் அதிகாலை ஐந்து மணி! பணி விடைகளில் சிறந்து விளங்கும் சீடர் எழுந்து குளித்து விட்டு, திருநீறு பூசி, அன்றைய வழிபாட்டையும் முடித்து குருநாதரைப் பணிந்து நமஸ்காரம் செய்தார். 'குருநாதரே! நான்கு மணிக்கே நான் விழித்து விடுவேன் தினசரி! ஆனால், அவன் ஐந்தரை மணி வரை புரண்டு புரண்டு படுப்பான்! குறட்டை வேறு விடுவான்! என்றான். 'அப்படியா! அவனைப் போல் தூங்குவதற்கு நீயும் கற்றுக் கொண்டால் நன்றாக இருக்கும்' என்றார் குரு. குருவின் பதிலால் குழப்ப மடைந்தான் அவன்! குரு தொடர்ந்து சொன்னார்: "ஆமாம்! நீயும் உறங்கிக் கொண்டிருந்தால் அடுத்தவனைப் பற்றி குறை கூற வந்திருக்கமாட்டாய் அல்லவா?" (தொடரும்...)

# செய்தித்துளிகள்

## சீரற்றவானிலையால் ரயில் சேவை பாதிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக களனி பகுதியூடான ரயில் சேவைகள் தற்காலிகமாக பாதிக்கப் பட்டுள்ளது.

வீசிய பலத்த காற்றினால் ரயில் தண்டவாளங்களில் மரம் முறிந்து வீழ்ந்துள்ள காரணத்தால் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (ஜ-4)

## மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

(கொழும்பு)

நாட்டில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக ஐந்து மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## தனிமைப்படுத்தல் முகாமாகும் போகம்பர சிறைச்சாலை

(கொழும்பு)

விளக்கமறியல் கைதிகளின் தனிமைப்படுத்தலுக்காக கண்டியில் அமைந்துள்ள பழைய போகம்பர சிறைச்சாலைக் கட்டடத்தை பயன்படுத்த சிறைச்சாலைத் திணைக்களம் முடிவுசெய்துள்ளது.

அதன்படி, கொழும்பு மற்றும் மத்திய மாகாணத்தில் உள்ள சிறைகளுக்கு அனுப்பப்படும் கைதிகள் சிறையில் அடைக்கப்படுவதற்கு முன்பு இந்த மையத்தில் தடுத்து வைக்கப்படுவார்கள். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 140 | 200 |
| தக்காளி | 120 | 140 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 80 |
| கோவா | 140 | 150 | 140 | 150 |
| கரட் | 140 | 180 | 160 | 160 |
| பூசணி | 100 | 110 | 120 | 120 |
| புடோல் | 60 | 100 | 70 | 150 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 100 | 140 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 140 | 150 |
| பாகற்காய் | 200 | 280 | 240 | 250 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 150 | 160 |
| பயற்றங்காய் | 200 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 80 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 120 |
| கறிமிளகாய் | 350 | 300 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 300 | 250 |
| போஞ்சி | 350 | 320 | 250 | 240 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | — | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 60-70 | 60-80 |
| இராசவள்ளி | — | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | 220 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 70 | 80 | — | 80 |




## சவரத் தொழிலாளி மற்றும் அரசன்



அரசர்கள் அன்றைய காலத்தில் பொது மக்களைப் பற்றி அறிந்து கொள்ள பல முயற்சிகளில் ஈடுபட்டனர். ஒவ்வொருவரும் ஒருமுறையைப் பின்பற்றி மக்களைப் பற்றி அறிந்தனர்.

இரவில் மாறுவேடம் அணிந்து நகர்வலம் வருதல், மாறுவேடம் அணிந்து மக்களோடு மக்களாகப் பழகுதல், சிலரை அழைத்து கருத்து கேட்பது என்று பல முயற்சிகளில் ஈடுபட்டனர்.

ஒருமுறை அரசர் ஒருவர் சவரம் செய்து கொண்டார். சவரத் தொழிலாளி அவருக்குச் சவரம் செய்தபோது, தன் நாட்டு மக்களின் நிலை குறித்து சவரத் தொழிலாளியின் கருத்தைக் கேட்டார்.

எனது குடிமக்கள் அனைவரும் வளமையாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளார்களா? என்று வினவினார் அரசர்.

ஆமாம் மகாராஜா என்று பதில் சொன்னான் சவரத் தொழிலாளி. நம் நாட்டில் மிகவும் வறிய ஏழைகள் கூட எலுமிச்சை அளவு தங்கம் வைத்திருக்கிறார்கள் என்றும் சவரத் தொழிலாளி கூறினான்.

அரசர் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போனார். சவரத்தை முடித்துத் தொழிலாளி சென்றதும், தனது மூத்த, மதியூக மந்திரியை அழைத்தார் அரசர். நமது நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆக, நான் ஒரு நல்ல ராஜா. அரசர் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொண்டார். அரசர் எப்படி அவ்வாறு நம்புகிறார் என்பதை ஆராய்ந்து அறிந்த அமைச்சர், மக்களின் நிலை குறித்த கருத்தை நம்பவில்லை.

ஒருநாள் அமைச்சர், சவரத் தொழிலாளி இல்லாத நேரத்தில் அவனது வீட்டுக்குள் புகுந்து விட்டார். அங்கே ஒரு பையில் எலுமிச்சை அளவில் ஒரு தங்க உருண்டை இருப்பதை அமைச்சர் கண்டார்.

சவரத் தொழிலாளி அப்படிக் கூறியதற்கான காரணத்தை கண்டுபிடித்துவிட்டேன் என்று தனக்குள் சொல்லிக் கொண்டார் அமைச்சர்.

பின்னர் அவர் அந்த தங்க உருண்டையை எடுத்துக் கொண்டு சத்தம் போடாமல் அரண்மனைக்குத் திரும்பி விட்டார். அரசரிடம் தான் செய்ததைக் கூறி, சவரத் தொழிலாளியிடம், மறுநாள், முன்பு கேட்ட கேள் வியையே கேட்குமாறும், அவன் தனது கருத்தை மாற்றிக் கொண்டிருப்பான் என்றும் அமைச்சர் கூறினார்.

அடுத்தநாள், தொலைந்த தங்கத்தைத் தேடி அலுத்துக் களைத்துப் போயிருந்த சவரத் தொழிலாளி தாமதமாக அரண்மனைக்கு வந்தான். அவன் வாடிப்போன முகத்தோடு அரசருக்குச் சவரம் செய்யத் தொடங்கினான்.

குடிமக்களின் நிலை எப்படி இருக்கிறது என்று முந்திய நாள் கேட்ட கேள்வியையே மறுபடி கேட்டார் அரசர். மகாராஜா, எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று கூற முடியாது.

சிலர் மன அமைதியின்றி கவலையால் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றான் சவரத் தொழிலாளி.

உடனே அரசர், ஒவ்வொரு மனிதனும் தனது சூழ்நிலையின் அடிப்படையிலேயே உலகத்தைப் பற்றிக் கணிக்கிறான் என்பதை அரசர் உணர்ந்தார்.

அந்த உண்மையை உணர வைத்த அமைச்சருக்கு அரசர் உரிய பரிசளித்து கௌரவித்தார்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

61



நார்த்தாமலை விஜயாலய சோழீஸ்வரம்

சுவர்கள் ஒரே அமைப்பாகப் பூகம்பத்தைத் தாங்கும் அளவுக்கு வலுவான அடித்தளங்களோடு அமைந்ததால் இதுவரை எவ்வித நிலநடுக்கத்தாலும் பெரிய கோயிலுக்கு எந்தவிதப் பாதிப்பும் நேரவில்லை. அப்படிப்பட்ட ஒரு நேர்த்தியான, காலத்தையும் தாங்கி நிற்கும் கட்டுமானம்.

பெரிய கோயிலின் ஸ்ரீவிமானத்தைப் (கோபுரம்) பார்க்கின்ற எல்லோருக்கும் ஒரு கேள்வி எழும். விமானக் கட்டுமான வேலையின்போது, கற்களை எப்படி மேலே கொண்டு போயிருப்பார்கள்? பாரம் தூக்கிகள் இல்லாத ஒரு காலத்தில் சுமார் 60 மீற்றர் உயரக் கோபுரம் எவ்வாறு கட்டப்பட்டது?

சாரங்கள் மூலமாகக் கொண்டு செல்லப்பட்டது என்றால் கோபுரத்தில் மேலே செல்லச் செல்ல உட்பகுதியில் அளவு குறைந்து கொண்டே வரும். இதில் சாரம் அமைத்து வேலை செய்ய முடியாது.

இந்தப் பிரச்சினைக்கு மாற்று வழி கண்டுபிடிக்கப்பட்டது.

கோபுரத்தின் உட்பகுதியைக் கடினமான மணல் கொண்டு நிரப்பினார்கள். அதில் ஏறிக்கொண்டு கட்டுமான வேலைகள் நடைபெற்றுள்ளன.

உச்சி விமானக் கற்கள் அமைக்கப்பட்ட பிறகு உள்ளே குவிக்கப்பட்ட எல்லா மணலையும் நீக்கியுள்ளார்கள்.

இது எப்படி நமக்குத் தெரிந்ததென்றால், நீக்கப்பட்ட மணலின் தடயங்களைத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கண்டுபிடித்ததால் இந்த நுட்பம் அறியப்பட்டது.

அதேபோல், ஒரு கல்லுக்கும் அடுத்தக் கல்லுக்கும் இடையே சுண்ணாம்புக்காரைப் போன்று எந்தப் பொருளையும் வைக்காமல் கட்டியிருப்பதும் உண்மையிலேயே வியக்கத்தக்கது. பெரிய கோயில், இராஜராஜீஸ்வரம் (அல்லது இராஜராஜேச்சரம்), பெருவுடையார் என்கின்ற பெயர்கள் இந்தக் கோயிலுக்கு உண்டு.

கல்வெட்டுக்களில் பிரகதீஸ்வரர், பெருவுடையார், பெரியகோயில் என்கின்ற குறிப்புக்கள் இல்லை.

இராஜராஜேஸ்வரம் என்றே கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

பெரிய கோயில் 'ப்ருஹத் ஈஸ்வரம்' என்கின்ற வடமொழிப் பெயரால் 'பிரஹதீஸ்வரம்' என்றும் பெரிய லிங்கத்திருமேனி உள்ளதால் 'பிரஹதீஸ்வரர் ஆலயம்' என்றும் அழைக்கப்பட்டது.

தமிழில் பெரு உடையார், தென்னாட்டுக் கோயில்களில் மிக உயர்ந்த விமானத்தை உடையதால் பொது மக்களால் 'பெரிய கோயில்' என்று அழைக்கப்படுகிறது. இக் கோயிலின் ஸ்ரீவிமானத்திற்கு தக்ஷிணமேரு என்று பெயர்.

கடந்த இரு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை பெரியகோயில் பற்றிப் பல தவறான தகவல்கள் தமிழர்களிடையே பரப்பப்பட்டன.

கிருமி கண்ட சோழன் என்ற கரிகாலனால் கட்டப்பட்டது.

அவர் இக்கோயிலைக் கட்டி, சிவகங்கை குளத்தில் குளித்து தனது குஷ்ட நோய் நீங்கப் பெற்றார் என ஒரு கல்வெட்டு கூறுகிறது என்றார்கள் சிலர்.

(தொடரும்)

கொள்கையில் நம்பிக்கை இருக்க வேண்டியது தான். அது குருட்டுத்தனமாக இருக்கக்கூடாது.
– ஆவ்பரி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் அரசியல்வாதிகளை அவதானித்துக் கொண்டிருங்கள்

தேர்தலில் வாக்களித்ததோடு தங்கள் கடமை முடிந்து விட்டதாகத் தமிழ் மக்கள் நினைக்கின்றனர்.

இதனாலேயே தமிழ் அரசியல்வாதிகளில் பலர் தமது பணிகளை மறந்து செயற்படுகின்றனர்.

இதுதவிர, சில தமிழ் அரசியல் கட்சிகளிடையே நிலவுகின்ற உள்ளக முரண்பாடுகளைப் பார்கும்போது இஃதென்ன அநியாயம். தேர்தல் முடிந்த கையோடு இப்படியெல்லாம் நடக்கிறது என்று நினைக்கத் தோன்றும்.

தேர்தல் பிரசாரங்களில் வெட்டி விழுத்துவது போலக் கூறிக் கொண்டவர்கள், இப்போது செய்வது என்ன என்பதைப் பாருங்கள்.

தமிழ் மக்களுக்கு விடிவைப் பெற்றுத் தருவோம் என்று கூறியவர்கள் இப்போது தங்கள் எதிர்கால அரசியலுக்காகக் களம் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாராளுமன்றப் பதவிக் காலமான ஐந்து ஆண்டுகளில் நான்கு ஆண்டுகள் தங்களின் நலன் என்பதாக ஆக்கிக் கொண்டு, எஞ்சிய இறுதி ஒரு வருடத்தில் மட்டும் தமிழ் மக்கள், தமிழ் இனம், அபிவிருத்தி என்ற கோசங்களைப் போடத் திட்டமிடுவர்.

இந்தக் கோசங்கள் ஏலவே நான்கு ஆண்டுகளில் தாம் செய்த சொந்த நலன் சார்ந்த விடயங்களை மறைப்புச் செய்யும் என்பது சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளுக்கு நன்கு தெரியும்.

இதற்கான அடிப்படைக் காரணம் அவர்களன்று. மாறாக தமிழ் மக்களாகிய நாம் என்பதே மெய்.

உண்மையில் ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்னரும் வெற்றியீட்டியவர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த கட்சிகள் எங்ஙனம் நடந்து கொள்கின்றன என்பதைப் பொதுமக்கள் அவதானிக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக, தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் தேர்தல் பிரசாரத்தின் போது கூறியவை என்ன? அவர்கள் சார்ந்த கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனம் என்ன? என்பதையெல்லாம் நாம் அவதானிப்பதுடன் ஞாபகத்திலும் வைத்திருக்க வேண்டும்.

இந்த அவதானிப்பில் அனைத்துத் தமிழ் மக்களும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது அவசியமாகும்.

இதற்கு மேலாக, கட்சி ஆதரவு என்பதை முற்று முழுதாக விலக்கி நடுநிலை நின்று உண்மையாக – விசுவாசமாக தமிழ் மக்களுக்காகப் பாடுபடுகின்றவர்கள் யார்? குரல் கொடுப்பவர்கள் யார்? என்பதை மக்கள் அவதானித்து இனங் காண வேண்டும்.

இந்த அவதானிப்பு நடக்குமாயின், தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் அவர் தம் அரசியல் கட்சிகள் தங்களை மக்கள் பணியில் ஈடுபடுத்துவர்.

ஆக, அரசியல்வாதிகளை வழிப்படுத்த தேர்தலுக்குப் பின்பான மக்களின் அவதானிப்பு மிக மிக அவசியமானதாகும்.

# கொரோனா வைரஸ் நோய்த்தாக்கம் குழந்தைகளின் இதயத்தை கடுமையாக பாதிக்கும்

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(வூஸ்டன்)

**கொரோனா வைரஸ் நோய் அறிகுறிகள் குழந்தைகளின் இதயத்தை கடுமையாக பாதிப்படையச் செய்யும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.**

இ கிளினிக்கல் மெடிசன் இதழில் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கொரோனா வைரஸ் குழந்தைகளையும் பாதித்து வருகிறது.

பெரும்பாலான குழந்தைகள் அறிகுறி இல்லாமலேயே அந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் குழந்தைகளுக்கு எளிதில் கொரோனாத் தொற்று பரவாது என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதன் பின்னர் நடந்த ஆய்வில் குழந்தைகளுக்கு கொரோனா வைரஸ், அறிகுறிகளை காட்டாமலேயே பரவியது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனால் கொரோனா வைரஸ் பரவலில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் நோய் அறிகுறிகள் குழந்தைகளின் இதயத்தை கடுமையாக பாதிப்படையச் செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளின் அழற்சி நோய் அறிகுறிகள் கொரோனா வைரஸுடன் இணைக்கப்பட்டிருப்பதால் அவர்களது இதயம் கடுமையாகப் பாதிக்கப்படலாம்.

இதன்மூலம் சில குழந்தைகளுக்கு வாழ்நாள் முழுவதும் கண்காணிப்பு தேவைப்படக்கூடிய அளவுக்கு அவர்களின் இதயத்தை சேதப்படுத்தும் நிலை உள்ளது.

600 இற்கும் மேற்பட்ட குழந்தைகளிடம் அழற்சி நோய் அறிகுறிகள் குறித்து ஆய்வு செய்த போது ஆரோக்கியமாக உள்ள குழந்தைகள் அறிகுறி இல்லாமல் 3 அல்லது 4 வாரங்களுக்கு பிறகு அவர்களை வைரஸ் தொற்று தாக்குகிறது என்பது தெரியவந்தது.

அவர்கள் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று யாரும் அறிந்திருக்க மாட்டார்கள். சில வாரங்கள் கழித்து குழந்தைகள் உடலில் அழற்சி, வீக்கம் ஆகியவை ஏற்படுத்தலாம். அதன்பின் தான் அவர்கள் நோய்தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவரும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-2)

# கடன் கொடுத்தவருக்கு கடன் வாங்கியவர் அடி

(வாழைச்சேனை)

கடனாக வழங்கிய பணத் தொகையை திருப்பிக் கேட்ட நபர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் வாழைச்சேனையில் இடம் பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நபர் ஒருவர் மற்றொருவருக்கு கடனாக கொடுத்த பணத்தொகையை மீள கேட்ட போது அதனை வழங்காமல் இழுத்தடிப்பு செய்துள்ளார்.

குறித்த பணத்தை பலமுறைகள் கேட்டும் அதனை வழங்க மறுத்தவருக்கு எதிராக பணம் கொடுத்த நபர் மத்தியஸ்த சபையில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில் முறைப்பாடு செய்த ஆத்திரத்தில் பணத்தை கடனாக பெற்றுக் கொண்ட நபர் பணம் கொடுத்த நபர் மீது மறைந்திருந்து கூரிய ஆயுதத்தால் கடும் தாக்குதலை நடத்தியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான நபர் வாழைச்சேனை ஆதார வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவதுடன், தாக்குதலை நடத்தியவரை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# பொலிஸாரின் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட தங்கூசி வலை

(யாழ்ப்பாணம்)

தடை செய்யப்பட்ட தங்கூசி வலையினைப் பாவித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய துறையூர் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது, வேலணையைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 5 கிலோ 500 கிராம் அளவுடைய தடைசெய்யப்பட்ட தங்கூசி வலை கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (5-8)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

மரியாதையாகப் பேசுவதும் நடப்பதும் செலவில்லாமல் நமக்கு வரும் செல்வங்கள்.
-ஜார்ஜ் எலியட்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 9 ஆம் திகதி திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** வாரிக்குட்டியூர், பூவரசங்குளம், நித்திய நகர், கப்பாச்சி ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், **Youth Training Centre,** தலைமன்னார் **Palmyrah House,** கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, கரைசல் **Palmyrah House Timex** ஆடைத்தொழிற்சாலை, தலைமன்னார் வைத்திய சாலை, **New Silk Road Aquatic Company,** கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அனைவருக்கும் ஊழியராக இருங்கள்



ஏழைகளுக்கு கல்வியின் பெரும் பகுதியை வாய்மொழியாகவே கற்றுத் தரவேண்டும். காரணம் அவர்களுக்கு பள்ளிகள் ஏற்படுத்த உரிய காலம் இன்னும் இந்தியாவில் உருவாகாமலேயே இருக்கிறது.

பெண்களுக்குச் சரியான மதிப்பை அளிப்பதன் மூலமே எல்லா நாடுகளும் சிறப்பெய்தியிருக்கின்றன. எந்தச் சமுதாயம் பெண்களை மேன்மைப் படுத்தவில்லையோ அந்த நாடும் மக்களும் ஒரு போதும் உயர்வடைவதில்லை.

உன்னால் உதவி செய்ய இயலாவிட்டால் வழியை விட்டு விலகி ஒரு பக்கமாக நின்று நடப்பதைக் கவனி. உன்னால் உதவி செய்ய இயலாவிட்டால் உபத்திரவமாவது செய்யாது விலகி இருப்பாயாக.

சிந்திப்பதற்கும் செயல்களில் ஈடுபடுவதற்கும் மனிதனுக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும். இதுவே மனித வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையாகும்.

பிறருக்கு வழிகாட்டவோ, அடக்கியாளவோ எப்போதும் முயலவேண்டாம். அனைவருக்கும் ஊழியராக இருங்கள். இதுவே எல்லாவற்றிலும் முக்கியமானது.

# யாழ்.மாவட்ட ரீதியான மென்பந்து சுற்றுத்தொடர் சங்கானை உதயதாரகை அணி சம்பியன்

தையிட்டி ஸ்ரார் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய 11 பேர் 10 ஓவர் கொண்ட மென்பந்துச் சுற்றுப்போட்டியில் சங்கானை உதயதாரகை அணி முதல் போட்டியில் உடுவில் **Hari bol** அணியையும் இரண்டாவது போட்டியில் பருத்தித்துறை ஸ்பைடர் அணியையும் காலிறுதிப் போட்டியில் **BABA boys** அணியையும் அரையிறுதி போட்டியில் தையிட்டி ஸ்ரார் கழகத்தையும் வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

இறுதிப்போட்டியில் யாழ்.மாவட்டத்தில் பலம்பொருந்திய அணிகளில் ஒன்றான இணுவில் கலையொளி அணியை எதிர்கொண்டது. நாணயற்சுழற்சியில் வெற்றிபெற்ற சங்கானை உதய தாரகை அணி



துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

ஆரம்ப வீரர்களாக அஜன் மற்றும் டிசாந்த் ஆகியோர் களமிறங்கினர்.

ஆரம்பம் முதலே அதிரடி ஆட்டத்தை அஜன் வெளிப்படுத்தி 44 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்க அடுத்து களமிறங்கிய சூரியும் அதிரடியாக 30 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்க அடுத்து வந்த கஸ்து வாணவேடிக்கை நிகழ்த்தி 41 ஓட்டங்களை பெற 10ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 132 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இணுவில் கலையொளி அணியினரும் ஆரம்பம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இருந்தும் சங்கானை உதய தாரகை அணியின் பந்துவீச்சாளர்களின் சிறந்த பந்துவீச்சின் உதவியுடன் 32 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனாகியது. போட்டியில் ஆட்டநாயகனாக கஸ்து தெரிவானமை குறிப்பிடத்தக்கது. (4)

# 32வது இளைஞர் விளையாட்டு விழாவினை முன்னிட்டு பிரதேச மட்ட கரப்பந்தாட்ட போட்டிகள்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம்தோறும் நடத்துகின்ற 32 ஆவது இளைஞர் விளையாட்டு விழா தற்போது பிரதேச ரீதியாக நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில் கரப்பந்தாட்டப் போட்டி நேற்றைய தினம் ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு சென்ஜோன்ஸ் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் கூழாமுறிப்பு பகுதியில் இடம்பெற்றது.

பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் மோதிய முத்துஐயன்கட்டு இளைஞர் கழக அணியை சென்ஜோன்ஸ் இளைஞர் கழக அணி வீழ்த்தி வெற்றி வாகை சூடியது.

போட்டியில் கூழாமுறிப்பு சென்ஜோன்ஸ் அணியினர் முதலாம் இடத்தையும் முத்துஐயன்கட்டு பாரதி இளைஞர் கழக அணியினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

அதேபோன்று ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியிலே கரிப்பட்ட முறிப்பு புதியநகர் ஈகிள்ஸ் இளைஞர் கழக அணியினை எதிர்த்து போட்டியிட்ட முத்துஐயன்கட்டு பாரதி இளைஞர் கழக அணியினர் வெற்றி வாகை சூடினர்

அந்தவகையில் முத்துஐயன்கட்டு பாரதி இளைஞர் கழக அணியினர் முதலாம் இடத்தையும் கரிப்பட்ட முறிப்பு புதிய நகர் ஈகிள்ஸ் இளைஞர் கழக அணியினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

குறித்த போட்டியில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (4-281)

# வெளியிடப்பட்டது ஐ.பி.எல். தொடரின் போட்டி அட்டவணை

நடப்பு ஆண்டு ஐ.பி.எல். இருபது - 20 லீக் தொடருக்கான போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டுள்ளது.




இதன்படி, அபுதாபியில் நடைபெறவுள்ள முதல் லீக் போட்டியில், நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இரண்டாவது போட்டியில் டில்லி கபிட்டல்ஸ் அணி யும், கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியும் மோதுகின்றன.

மூன்றாவது போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

10 நாட்களில் இரண்டு போட்டிகளில் நடைபெறுகின்றன. முதல்போட்டி 3.30 மணிக்கும், இரண்டாவது போட்டி 7.30 மணிக்கும் நடைபெறுகிறது.

பிளே ஓப் சுற்றுகள் மற்றும் இறுதிப்போட்டி நடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதிப் போட்டி நவம்பர் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மொத்தம் 53 நாட்கள் நடைபெறும் இந்தப் போட்டி தொடர், இதுவரை நடைபெற்ற ஐ.பி.எல் தொடர்களிலேயே மிக நீண்ட தொடராகும்.

கடந்த மாத இறுதியில் போட்டி அட்டவணை வெளியிடப்பட இருந்தது. ஆனால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியைச் சேர்ந்த 2 வீரர்கள் உட்பட 13 பேர் கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டதாலும், அபுதாபி மற்றும் டுபாயில் வீரர்களை தனிமைப்படுத்தி வைப்பதற்கு வெவ்வேறு விதிகள் விதிக்கப்பட்டதாலும் அட்டவணையை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டது.

நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை அணி வீரர்களான தீபக் சாஹர் மற்றும் ருதுராஜ் கெய்க்வாட் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல். இன் 13 லீக் தொடர் இம்மாதம் 19ஆம் திகதி முதல் நவம்பர் 10ஆம் திகதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில், அபுதாபி, ஷார்ஜா மற்றும் டுபாய் ஆகிய மூன்று இடங்களில் நடைபெறவுள்ளன. டுபாயில் 24 போட்டிகளும் அபுதாபியில் 20 போட்டிகளும் ஷார்ஜாவில் 12 போட்டிகளும் நடைபெறுகின்றன. (4)

## இருபது-20 தொடரை வென்றது இங்கிலாந்து



அவுஸ்திரேலியா அணிக்கெதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில், இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

சவுத்தாம்ப்டன்- ரோஸ் பவுல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 157 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஆரோன் பின்ஞ் 40 ஓட்டங்களையும், மார்கஸ் ஸ்டொயினிஸ் 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், கிறிஸ் ஜோர்தான் 2 விக்கெட்டுகளையும், ஜொப்ரா ஆர்செர், மார்க்வுட் மற்றும் அடில் ராஷித் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 158 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 18.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை அடைந்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோஸ் பட்லர் ஆட்டமிழக்காது 77 ஓட்டங்களையும், டாவிட் மாலன் 42 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில், அஸ்டன் அகர் 2 விக்கெட்டுகளையும், மிட்செல் ஸ்டாக் மற்றும் அடம் செம்பா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 54 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 4 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 77 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஜோஸ் பட்லர் தெரிவுசெய்யப்பட்டார். (4)

## படுகாயமடைந்து...

வராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தெல்லிப்பழைப் பகுதியில் வசித்து வந்த குறித்த பெண் யாழ்ப்பாணத்தில் இருந்து தனது வீடு நோக்கி கடந்த 21ம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

இதன்போது திடீரென பிரேக் பிடித்த போது மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே வீழ்ந்துள்ளார். அத்துடன் அவர் அணிந்திருந்த தலைக்கவசம் கழன்று வீழ்ந்துள்ளது.

இதனால் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## இறந்தவரின்...

இராஜகிராமம், கரவெட்டி மேற்கைச் சேர்ந்த 27 வயதுடைய நடராஜா நரேந்திரன் என்பவர் நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று மாலை சுமை தூக்கி வந்த போது வீதியில் விழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவர் 1990 அம்புலன்ஸ் வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் இறந்து விட்டதாக தெரிவித்து வைத்தியசாலையில் உள்ள தற்காலிக பிண அறையில் அவரின் உடல் வைக்கப்பட்டது.

இந்நிலையில் அவரின் உறவினர்கள் தற்காலிக பிண அறையில் சென்று அவர் உடலத்தைப் பார்த்தபோது உடலசைவு இருப்பதாக தெரிவித்து உடலத்தை அதி தீவிர சிகிச்சை பிரிவுக்கு உட்படுத்துமாறு கோரினர்.

இதனால் வைத்தியசாலையில் பரபரப்பான சூழ்நிலை காணப்பட்டது.

இதனையடுத்து மீண்டும் அவரின் உடலம் அதி தீவிர சிகிச்சை பிரிவுக்கு எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டு அவர் இறந்ததாக உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் உடலில் அசைவு இருந்த போதும் அவரை பிண அறையில் போட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த வைத்தியசாலை தரப்பினர் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாகவும் ஆனால் அவரின் உறவினர்கள் தற்காலிக பிண வறையில் இருந்த உடலை அதி தீவிர சிகிச்சை பிரிவுக்கு முன்னால் இழுத்துக் கொண்டு சென்ற நிலையில் அவ் உடலத்தை பரிசோதித்து அவர் இறந்தமையை உறுதிப்படுத்தியதாக வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்தனர்,

இச்சம்பவத்தையடுத்து பருத்தித்துறைப் பொலிஸார் அப்பகுதிக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனால் நேற்று மாலை வைத்தியசாலை பரபரப்பாக காணப்பட்டது. (ம-3,60)

## தங்கம் மீதான...

கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானம் மேற்கொண்டுள்ளார்.

"1971ஆம் ஆண்டு முதல் தங்கம் மற்றும் ஆபரணக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்டிருந்த வரிச் சலுகை 2017ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட வருமான வரிக் கொள்கையில் நீக்கப்பட்டது.

தங்கம் மற்றும் ஆபரண ஏற்றுமதியில் ஈட்டப்படும் உண்மையான வருமானம் இதன்மூலம் வெளிக் கொணரப்படாத நிலை தோன்றியது.

2018ஆம் ஆண்டு தங்க இறக்குமதிக்கு 15 சதவீத வரி விதிக்கப்பட்டது. தங்க நகைகளின் விலை உயர்வடைவதற்கு இவ்வரி காரணமாக அமைந்தது. குறித்த வரியை உடனடியாக நீக்கி, இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண கைத்தொழிலின் மேம்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார் கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்று பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)

## எண்ணெய்க் கப்...

எது.

அம்பாறை கடற்பரப்பில் தீப்பற்றிய நிலையில் கடும் போராட்டத்திற்கு மத்தியில் அணைக்கப்பட்டு சர்வதேச கடற்பரப்பிற்கு இழுத்துச் செல்லப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் எம்.டி.நியூ டயமண்ட் எண்ணெய்க் கப்பலில் மீண்டும் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

தீ முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதால் கப்பலில் இருந்து அதிக வெப்பம் வெளியேறுவதால் இரசாயனப் பதார்த்தங்களையும் நீரையும் பயன்படுத்தி வெப்பத்தைத் தணிப்பதற்கான முயற்சிகள் தொடர்வதாக கடற்படை தெரிவித்துள்ளது. (ம-3)

## சுகாதார அமைச்...

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான நட்புறவு மற்றும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோருக்கிடையில் நேற்று சுகாதார அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதற் செயலாளர் வைத்தியர் சுஷில் குமார், உயர்ஸ்தானிகராலயத்தின் பொருளாதாரம் மற்றும் வணிகப் பிரிவின் அதிகாரி வைத்தியர் ராகேஷ் பாண்டே உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். (ம-3)

## அரச சார்பற்ற...

பான்மை பலத்தை வழங்கியதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

மக்களின் அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்கவும் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதையும் எதிர்ப்பவர்கள் அனைவரும் அரச சார்பற்ற நிறுவனத்தினர்.

இதனால், அவர்களின் எதிர்ப்பை பெரிதாக பொருட்படுத்த தேவையில்லை.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க அமைச்சரவை குழு ஒன்றை நியமிக்கப்பட்டுள்ளது என்றார். (ம-3)

## ஆணை...

மேலும் கூறியுள்ளதாவது.

"2015ஆம் ஆண்டு போதைப் பொருள் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அப்போது 6 ஆயிரத்து 700 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

2016ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 900 ஆக அதிகரிக்கப்பட்டது. கடந்த ஆண்டு 16 ஆயிரமாக உயர்ந்தது.

இப்போது 14 ஆயிரத்துக்கும் அதிகமாக இந்த எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. ஆணைக்குழுக்களை நியமித்து என்ன பயன் உள்ளது?

குற்றங்கள் குறையாவிடில் ஆணைக்குழுக்கள் இருந்து என்ன பயன்? மக்களின் பாதுகாப்பைத்தான் நாம் முதலில் பார்க்க வேண்டும் என்றார். (ம-3)

## அதிகாரங்களை...

மாயை. ஆணைக்குழுக்கள் இருக்கும்.

20ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் 7 ஆணைக்குழுக்கள் இருக்கும்.

தேர்தல், அரச சேவைகள், பொலிஸ், மனித உரிமை, இலஞ்சம் மற்றும் ஊழல், நிதி, தேர்தல் தொகுதி தொடர்பான எல்லை நிர்ணய ஆணைக்குழு என இந்த ஆணைக்குழுக்கள் தொடர்ந்தும் இருக்கும். அவை ஒழிக்கப்படவில்லை.

ஒக்ரோபர் மாதமளவில் 20ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படும். பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும்.

எந்த சந்தேகமும் இன்றி இதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

குறுகிய காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டிய அதிகாரங்களை வழங்குவதே 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் நோக்கம் எனவும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 20ஆவது...

எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்றைய தினம் இடம் பெற்ற கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1611 திகதி 2020/09/07
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 10 11 37 57

மெகா பவர்
திகதி 07/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0605
G 11 வெற்றி இலக்கங்கள் 09 12 28 50

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/09/07 சீட்டிழுப்பு இலக்கம் 1533
சுப்பர் இலக்கம் 01 வெற்றி இலக்கங்கள் 05 20 33 60
NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2020/09/07
சீட்டிழுப்பு இலக்கம் 4238
E 1 0 1 3 7 9

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 07-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2533
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 10 17 23 66

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1687 சீட்டிழுப்பு திகதி 07/09/2020
வெற்றி இலக்கங்கள் 03 20 35 58 ஆங்கில எழுத்து A
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 53,226,484
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல. 1034
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2020.09.07
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,707,665/-
வெற்றி இலக்கங்கள் 19 20 22 75 H
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 4676
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 521
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2020.09.07
சீட்டிழுப்பு இல. : 3364
வர்ணம் : நீலம்
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ 39,669,098.50
வெற்றி இலக்கங்கள் 19 25 38 55 A
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 1888
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1208 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 07.09.2020 தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் U 25 43 48 66
SUPER 500 விசேட இலக்கம் 8 5 5 5

ராசி அதிர்ஷ்டம்
திகதி 07.09.2020 வெற்றி வாரம் 2915 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 17 21 37 56
இடபம்
டபல் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 2945
ரூ.100 பரிசுக்குரிய 710
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,187,200
www.dlb.lk
தொ. பே.: 0112 333 546/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (3825)

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-224)

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0768226243 v2vacancies@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய் • மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை (C-112)

0768226240


## வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வடக்கு மாகாணத்தை வதிவிடமாகக் கொண்ட ஆலய முகாமையாளராகக் கடமையாற்றுவதற்கு பொருத்தமானவர்கள் தமது சுயவிபரத்துடன் தலைவர், வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபை, வற்றாப்பளை, முள்ளியவளை எனும் முகவரிக்கு 2020.09.25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம். (C-262)

தலைவர்
வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபை
வற்றாப்பளை, முள்ளியவளை.

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 15.04.1943 இறப்பு 05.09.2020

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பணியாளர் **பொன்னுத்துரை மதியுகன்** அவர்களின் அன்பு மாமனார்

அமரர்
### நடராசா இராசேந்திரா

அவர்கள் காலமானதையிட்டு துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-260)

நிர்வாகத்தினர், அங்கத்தவர், பணியாளர்கள்
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.


தரம் 5 மாணவர்களுக்கு ஆசிரியர் சு.கோணேஸ்வரனின்

**சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்**
தரம் 4,5 (புதிய பாடத்திட்டம்)
**G.C.E O/L கணிதம்**
30 வருட கடந்த கால வினாத்தாள்கள்
( அலகு ரீதியாக தொகுக்கப்பட்டது. ) (3828)

கிடைக்கும் இடம் :- சிவ தயா அச்சகம்
92 (150), நாவலர் வீதி (N.S.B வங்கி அருகில் மனோகரா தியேட்டர் சந்தி.)
077 396 5214, 021 221 9483

## WORK & STUDY

- தொழில்புரிய முன் அனுபவம் இல்லையா?
- அல்லது போதுமான கல்வித்தகைமை இல்லையா?

இன்றே இணையுங்கள் Inner Circle (Pvt) Ltd உடன் உங்களுக்குத் தேவையான தொழில் சார்ந்த

CERTIFICATE IN PROFESSIONAL DEVELOPMENT AND LEADERSHIP

அனுபவங்கள் | கற்கைநெறி | சான்றிதழ்கள்



பெற்றுக் கொள்ளமுடியும். வடமாகாணத்தல் 50 பேருக்கு முன்னுரிமை. பயிற்சிக் காலத்திலும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
13,500/= தொடக்கம் 24,500/= + EPF, ETF. பின்னர் பதவிக் கேற்றவாறு குறைந்தது 45,000/= இலிருந்து வழங்கப்படும்.
( வயது 18 தொடக்கம் 28 வரை. )

அழைக்க :- 076 770 7759 (3829)

நேர்முகத் தேர்வுக்கு - Address :- 100/3, Manipay Road, Jaffna.






## சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானம்

ஏகாதச ருத்ர ஹோம வழிபாட்டின் ஏழாம் நாள் கிரியா பூர்வமான சமர்ப்பணம்

### தீ மிதிப்பும் உடுக்கை ஒலி பாராயணமும்

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய ஈசான பாகத்தில் வீரமாகாளி தாயாரின் திருவருள் குறிப்பால் உணர்த்தப்பட்டு புதிதாக அமையப்பெற்ற சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானத்தில் உலக நன்மை வேண்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் மஹாளயபட்ஷ மண்டலாபிஷேகத்தில் இன்றைய தினம் உலக நன்மைக்காக இறந்த ஆன்மாக்களை திருப்தி செய்தல் பொருட்டும் பித்ருக்களின் ஆசிகளைப் பெற்று பிதிர்தோசம் நீக்கமற, மகா தீ மிதிப்பும் உடுக்கை ஒலி பாராயணமும் சிறப்பாக நடைபெற இறையருள் கைகூடியுள்ளது.

காலை 9.00 மணி முதல் மஹாளயபட்ஷ வழிபாடு காலை 10.00 மணிக்கு மஹா தீ மிதிப்புக்கான வளுந்துப்பானை தீ மூட்டல். அதனைத் தொடர்ந்து காலை 11.00 மணி தொடக்கம் மதியம் 2.00 மணி வரை உடுக்கை ஒலி பாராயணம். மாலை 5.00 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று மஹா தீ மிதிப்பு இடம் பெறும்.

குறித்த வழிபாடுகளில் பங்கெடுத்து இறைவன் இறைவியின் திருவருளை பெற்றுய்வீராக.

(C-261)

ஆலய தர்ம பரிபாலன சபையினர்

## கண்ணீர் அஞ்சலி



மண்டைதீவு தில்லேஸ்வரம்
சிவன் ஆலயத்தின் கும்பாபிஷேக பிரதமகுருவும்
வீணாகான குருபீடத்தின் பீடாதிபதியுமான
வணக்கத்திற்குரிய
**சிவஸ்ரீ. சபா. வாசுதேவக் குருக்கள்**
அவர்களின் அன்புத் தந்தையார்

பிரம்மஸ்ரீ
### ஞா. சபாரட்ண சர்மா

அவர்களின் இழப்பினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரப் பெருமானின் திருவடிகளில் பேரின்பம் அடைய அவன்தாள் பணிகின்றோம்.

- ஓம் சாந்தி -

பரிபாலன சபை,
தில்லேஸ்வரம், மண்டைதீவு.


## காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள் யாழ்.பிராந்தியம் (3792)

- முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி
- உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி

**முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**

- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**

- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்



உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 12.09.2020க்கு முன்னர் sasisuganya17@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

218, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.